ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2039 - 2017 සැප්තැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2017.09.29

*2039 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1618* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1631* |

**கவனிக்க.**- *ஸ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்ய சாதக சங்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1615 - B81211 - 5,403 (2017/09)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பொதுச் சேவை ஆணைக்குழு

தொழில், தொழிற் சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு

*நிறைவேற்றுத்தர சேவை வகைப்பாட்டின் சட்ட அலுவலர் தரம் III பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்*

*தொழில்,தொழிற் சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்திஅமைச்சின் சட்ட அலுவலர் பதவி வெற்றிடமொன்றிற்கு இந்த அறிவித்தலில் தரப்படுகின்ற தகைமைகளைக் கொண்டிருக்கின்ற பொருத்தமான தகுதியுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1.* ***ஆட்சேர்ப்பு முறை.***- *அறிவித்தலில் தரப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பொது சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ள நேர்முகப் பரீட்சை சபை முறையான நேர்முகப் பரீட்சையினை நடத்தும் என்பதுடன், பொது சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளியிடல் நடைமுறைக்கமைவாக முறையான நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட அதிகூடிய மொத்தப் புள்ளியின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். நியமனம் வலுப்பெறும் திகதி பொது சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.*

*2.* **தேவையான தகைமைகள் :**

*2.1* ***கல்வி/தொழில் தகைமைகள் -***

(i) *பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்தான சட்டமாணிப் பட்டம் ; அல்லது*

(ii) *உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.*

*2.2* ***அனுபவம் :***

(i) *உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் எடுத்ததன் பின்னர் சட்டத்தரணியாக 03 வருடங்களுக்குக் குறையாத செயலுறு தொழில்சார் அனுபவம் (அனுபவம் பெறப்பட்ட காலப்பகுதியில்,செயலுறு தொழில்சார் அனுபவத்துடன் ஒப்புறுதிப்படுத்துகின்ற ஆவணங்களில் திகதி மற்றும் அலுவலக முத்திரை தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்).*

*2.3* ***தேக ஆரோக்கியம்.***- *ஒவ்வொரு விண்ணப்பதாரியும், நாட்டின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், தனது கடமையை ஆற்றுவதற்கும் திடமான தேக ஆரோக்கியத்தையும், சிறந்த மனநிலையினையும் கொண்டிருத்தல் வேண்டும்.*

*2.4* ***ஏனைய தகைமைகள் :***

(i) *இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;*

(ii) *நன்னடத்தையுள்ளவராக இருத்தல் வேண்டும் ;*

(iii) *பதவிக்குரிய ஆட்சேர்ப்பிற்காக தேவைப்படுத்தப்பட்ட தகைமைகள் இருக்க வேண்டிய திகதியாக விண்ணப்பங்கள் கோரப்படுவதாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று ஒவ்வொரு விடயம் தொடர்பிலான தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.*

*3.* **தொழில் பற்றிய பொதுவான நியதிகளும் நிபந்தனைகளும் :**

(i) *இந்தப் பதவி நிரந்தரமானது. தங்களது ஓய்வூதிய உரித்து தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள கொள்கைத் தீர்மானங்களுக்கு தாங்கள் பொறுப்பாவீர்கள்.*

(ii) *இந்தப் பதவி 03 வருட தகுதிகாண் காலப்பகுதிக்கு அமைவானதாகும்.*

(iii) *நியமனத் திகதியிலிருந்து 03 வருடங்கள் நிறைவுறுவதற்கு முன்னர் ஆட்சேர்ப்பு நடைமுறையில் தெரிவிக்கப்பட்டவாறு முதலாவது வினைத்திறன்தடைகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.*

(iv) 2014.01.21 ஆந் திகதியிடப்பட்ட 1/2014 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாட்டு நியதிகளின் படியும், அதற்கு இடைநேரானவற்றுடனும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட தினத்திலிருந்து 05 வருடங்களுக்குள் அலுவலக மொழிகள் தொடர்பில் உரிய மொழித் தேர்ச்சியைப் பெற்றுள்ளாரென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும். அலுவலக மொழி அல்லாத மொழி மூலமொன்றில் சேவையில் இணைகின்ற அலுவலர் தகுதிகூர் காலப்பகுதியில் அலுவலக கரும மொழித் தேர்ச்சியினைப் பெறுதல் வேண்டும்.

(v) இந்த நியமனமானது, அரச சேவையில் நியமனங்களை ஆளுகின்ற பொதுவான நிபந்தனைகள், நடைமுறைகளுக்கும் பொது சேவை ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகளுக்கும், நிதி ஒழுங்குவிதிகள், தாபனவிதிக் கோவைகளின் ஏற்பாடுகள் மற்றும் அதனுடனான திருத்தங்களுக்கும், நிதி ஒழுங்குவிதிகள் அத்துடன் திணைக்களங்களினதும் ஏனைய கட்டளைகளுக்கும் அமைவானதாகும்.

4. **வயதெல்லை.**- விண்ணப்ப முடிவு திகதியன்று 21 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமாலும் இருத்தல் வேண்டும்.

5. **வேதன அளவுத்திட்டம்.**- பொது நிருவாகச் சுற்றிக்கை இலக்கம் 03/2016 இன்படி இந்தப் பதவியுடன் தொடர்பு பட்ட மாதாந்த வேதன அளவுத்திட்டம் ரூபா 47,615 - 10 x 1,335 - 08 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895 ஆகும். (துங்களின் வேதனமானது, கூறப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைவாகவும், இணைக்கப்பட்டுள்ள அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டவாறும் செலுத்தப்படும்).

6. முறைமையான நேர்முகப் பரீட்சைக்கான புள்ளி அளவுத்திட்டம் கீழே தரப்பட்டுள்ளது :

| | விடயம் | | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | 20 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்தான சட்டமாணிப் பட்டம் | | |
| | - முதல் வகுப்பில் சித்தி | 20 | |
| | - இரண்டாவது வகுப்பு மேல்நிலைச் சித்தி | 15 | |
| | - இரண்டாவது வகுப்பு கீழ்நிலைச் சித்தி | 10 | |
| | சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டில் முதல் வகுப்பில் சித்தி | 15 | |
| | சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டில் இரண்டாவது வகுப்பில் சித்தி | 10 | |
| | **குறிப்பு** : இறுதிப் பரீட்சையில் சிறப்பு நிலையில் சித்தியடைந்தால் மட்டுமே 10 புள்ளிகள் வழங்கப்படும். (அதி உயர் தகைமைக்கே புள்ளிகள் வழங்கப்படும். அதாவது பட்டம் அல்லது சட்டக் கல்லூரியிலிருந்தான தகைமை) | | |
| 02 | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | 15 |
| | பட்டப்பின்படிப்பு டிப்ளோமா அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஒரு வருடத்திற்கும் குறையாத சட்ட பின்படிப்பு டிப்புளோமா (ஒவ்வொரு டிப்புளோமாவிற்கும் 05 புள்ளிகள்) | | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகத்தினால் வழங்கப்பட்ட உரிய துறையில் 06 மாத காலப்பகுதியிலும் குறையாத டிப்ளோமா (ஒவ்வொரு டிப்ளோமாவிற்கு 03 புள்ளிகள்) | | |

| | விடயம் | | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 03 | **மேலதிக அனுபவம்**<br><br>அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகத்தினால் நடத்தப்பட்ட உரிய துறையில் 03 மாத காலப்பகுதியிலும் குறையாத சான்றிதழ் பாடநெறிக்கு (ஒவ்வொரு பாடநெறிக்கும் 02 புள்ளிகள்) அரச சேவையில் அல்லது தனியார் சேவையில் சட்டத்தரணியொருவராக அனுபவம் - 06 மாதங்களிற்கும் அதிகமாகவும் ஒரு வருடத்திற்கும் குறைவாகவும் - 02 புள்ளிகள்<br>ஆகக்கூடியது 30. ஆண்டொன்றிற்கு 05 புள்ளிகள்<br>(அடிப்படைத் தகைமைகளைப் பெறுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட சட்டத்தரணி ஒருவராக 03 வருட கால சேவை விதிவிலக்காக)<br><br>மேலதிக அனுபவம், 20 வருடங்களுக்கு குறையாத சேவைக்காலப்பகுதி சட்டத்தரணியாக பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழினூடாக அல்லது சனாதிபதி சட்டவரைஞராக அல்லது நீதிபதியாக ஒப்புறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். | | 30 |
| 04 | **தகவல் தொழில்நுட்பத்தில் அறிவு**<br><br>பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கைலக்கழகமொன்றின் பட்டமொன்றிற்கான பிரதான பாடமாக தகவல் தொழில்நுட்பத்தைக் கற்றல்<br><br>அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகத்தில் 1500 மணித்தியாலங்கள் 01 வருடத்திற்கு குறையாத தகவல் தொழில்நுட்ப டிப்ளோமாவிற்கு<br><br>அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் சான்றிதழ் பாடநெறி<br>- 06 மாதங்கள் /720 மணித்தியாலங்கள்<br><br>- 03 மாதங்கள் /360 மணித்தியாலங்கள் | 15<br><br>10<br><br>07<br><br>05 | 15 |
| 05 | **ஆங்கில மொழியில் தேர்ச்சி**<br>ஆங்கில மொழியில் பட்டப் பின்படிப்பு பட்டம்/ பட்டப் பின்படிப்பு சட்டமாணிப் பட்டம்/சட்டமாணிப்பட்டம்<br>(உரிய அனைத்து வினாத்தாள்களும் ஆங்கிலத்தில் பதிலளித்திருத்தல் வேண்டும்)<br><br>பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவகத்தில் ஆங்கில மொழியில் டிப்ளோமா<br>(01 வருடம் அல்லது 1500 மணித்தியாலங்கள்)<br><br>பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவகத்தில் ஆங்கில மொழியில் சான்றிதழ்<br><br>- 06 மாதங்கள் /720 மணித்தியாலங்கள்<br><br>- 03 மாதங்கள் /360 மணித்தியாலங்கள் | 15<br><br>10<br><br>07<br><br>05 | 15 |
| 06 | நேர்முகப்பரீட்சையில் | | 05 |
| | மொத்தம் | | 100 |

7. **விண்ணப்பதாரியின் அடையாளம் :**

7.1 ஒவ்வொரு விடயம் தொடர்பிலும் சரியாக நிரப்பிய விண்ணப்பதாரிகள் மட்டுமே முறையான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

7.2 அனைத்து சான்றிதழ்கள் மற்றும் சான்றுரைகளின் மூலப் பிரதிகள் மற்றும் அவற்றின் முறையாக தயாரிக்கப்பட்ட பிரதிகளை நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

7.3 விண்ணப்பதாரிகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வருகின்ற ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகின்ற கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகின்ற வாகன சாரதி பத்திரம்.

8. **விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் முறை :**

8.1 விண்ணப்பப்படிவமானது 2017.10.30 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுத் தபாலில் பின்வருகின்ற முகவரிக்கு அனுப்பபடுதல் வேண்டும்.

செயலாளர்,
தொழில், தொழிற் சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு,
தொழில் செயலகம்
2 ஆவது தளம்,
நாரஹேன்பிட்டி,
கொழும்பு 05.

8.2 விண்ணப்பப்படிவமானது இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்துடன் ஒத்துப்போவதாக இருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம், A4 தாளில் 01 முதல் 11 வரையான விடய இலக்கம் முதலாவது பக்கத்திலும், 12 முதல் 16 வரையான விடய இலக்கம் இரண்டாவது தாளிலும் வருகின்ற அத்தைகய முறையில் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் படிவம் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்படிவத்தைக் கொண்டிருக்கின்ற தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட அலுவலர் பதவிக்கான விண்ணப்பம்" என்று தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

8.3 அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் ஒத்துப்போகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தவறுகின்ற அல்லது காலதாமதமாகின்ற விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் எந்த முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8.4 விண்ணப்பதாரியின் கையொப்பம், அரசாங்க பாடசாலையின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படையின் அதிகாரம்பெற்ற அலுவலர்/ மாதாந்தம் 37,522 ரூபாவினை விஞ்சிய திரட்டிய வேதனத்தைப் பெறுகின்ற வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற பதவியை வகிக்கின்ற பொலிஸ் சேவை அலுவலர் அல்லது அரச சேவை அலுவலர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

8.5 அரச சேவையில் ஏற்கனவே இருக்கின்ற விண்ணப்பதாரிகள், தமது விண்ணப்பங்களை அவர்கள் தற்போது இணைக்கப்பட்டுள்ள அவர்களது திணைக்களங்களின் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும்.

9. **தவறான தகவல்களைச் சமர்ப்பித்தல்.**- விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரால் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல் பிழையானது அல்லது தவறானதென்று ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால், அவரது விண்ணப்பதாரர் நிலை இரத்துச் செய்யப்படும். ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் அத்தகைய பிழையான அல்லது தவறான தகவல் கண்டுபிடிக்கப்பட்டால் உரிய சட்ட நடைமுறைகளுக்கு அமைவாக அரச சேவையிலிருந்து அவர் நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பொது சேவைகள் ஆணைக்குழு கட்டளை மூலம்,

எஸ். ஏ. நிமல் சரணதிஸ்ஸ,
செயலாளர்,
தொழில், தொழிற் சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு.

தொழில், தொழிற் சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு,
தொழில் செயலகம்
2 ஆவது தளம்,
நாரஹேன்பிட்டி,
கொழும்பு 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு**

சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

| தொடர் இல. | |
|---|---|

அலுவலகப் பயன்பாட்டிற்கு மாத்திரம்

1. (i) முழுப்பெயர்: திரு./திருமதி/ செல்வி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (ii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (iii) முதல் எழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. நிரந்தர முகவரி :----.

3. தற்காலிக முகவரி :----.
4. பால் :
   ஆண் - 0/பெண் - 1 ☐
   (உரிய இலக்கத்தைப் பெட்டிக்குள் எழுதவும்)
5. சிவில் அந்தஸ்து :

| திருமணமானவர் | | திருமணமாகாதவர் | |
|---|---|---|---|

(உரிய பெட்டிக்குள் சரியிடவும்)

6. பிரசாவுரிமை :----.
7. பரம்பரையாகவா அல்லது பதிவின் மூலமா நீங்கள் இலங்கைப் பிரசை ? :----.

8. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

9. தொலைபேசி இல. :

| நிலையானது | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கையடக்கத் தொலைபேசி | | | | | | | | | | |

10. (i) பிறந்த திகதி :

| ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|

   (ii) விண்ணப்பம் கோரப்படுகின்ற முடிவுத் திகதியன்று வயது :

| வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|

11. தகைமைகள் :

   11.1 கல்வித் தகைமைகள் :

   (i) பட்டச்சான்றிதழ் பயனுறுதிபெறும் திகதி :----.
   (ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.
   (iii) பட்டக் கல்வி :----.

12. தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவங்கள் :

   (i) மேல் நீதிமன்றத்தில் வழக்குரைஞராக அனுபவம் :…………………………………………………….....
   (ii) ……………………………………………………………………………………………………
   (iii) ……………………………………………………………………………………………………
   (iv) ……………………………………………………………………………………………………

13. ஏதேனும் குற்றத்திற்காக நீங்கள் சட்ட நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டீர்களா ? : ஆம் / இல்லை

   (i) 'ஆம்' என்றால் திகதி, வழக்கு இலக்கம் மற்றும் ஏனைய உரிய தகவல்கள் :
   ……………………………………………………………………………………………………

14. விண்ணப்பதாரியின் சான்றுப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் எனது அறிவிற்கு எட்டியவரையில் உண்மையானவையும், சரியானவையுமென்று நான் வெளிப்படுத்துகின்றேன். இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப் படுவதற்கு முன்னர் என்னால் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல் உண்மையற்றது அல்லது தவறானது என்று நிரூபிக்கப்பட்டால், எனது விண்ணணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதையும், அத்தகைய நிலைமை நான் பதவிக்கு நியமிக்கப்பட்டதற்குப் பின்னர் ஏற்பட்டால், எதுவித நட்டஈடும் செலுத்தப்படாது சேவையிலிருந்து பணிநீக்கம் செய்யப்படுவதற்குப் பொறுப்பாவேன் என்பதையும் நான் முழுமையாக அறிவேன்.

----,
விண்ணப்பதாரயின் கையொப்பம்.

திகதி :----.

15. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துதல் :
இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பித்துள்ள திரு./ திருமதி/ செல்வி ............................................... அவர்களை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் என்பதையும், அவர் என் முன்னிலையில் .................. ஆந் திகதி தனது கையொப்பத்தை இட்டார் என்பதையும் நான் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்துகின்ற அலுவலரின் கையொப்பமும், அலுவலக முத்திரையும்.

திகதி :----.

16. திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தலும், பரிந்துரைப்பும் :

(ஏற்கனவே அரச சேவையிலிருக்கும் அலுவலர்களினால் நிரப்பப்படுதல் வேண்டும்) விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி ........................... இத்திணைக்களத்தில்/ இந்த அமைச்சில் ........................ ஆக சேவையாற்றுகின்றரென்பதுடன், அவரது பணி மற்றும் நடத்தை திருப்தியானது என்பதுடன், அவரால் தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் சரியானதென்பதுடன், இந்தப் பதவிக்கு அவர் தெரிவுசெய்யப்பட்டால், தற்போதைய பதவியிலிருந்து அவரை விடுவிப்பதற்கு இணங்குகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(அலுவக முத்திரையினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.)
திகதி :----.

9-761

---

## சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

### இலங்கை ஆயுர்வேத திணைக்களத்தின் வெளிக்கள/ அலுவலக உத்தியோகத்தர்கள் - வகுதி 1 சேவைக்குரிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - திறந்த

ஆயுர்வேத திணைக்களத்தின்கீழ் உள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணிப் பட்டியலில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் PSC/EST/03-01-13-2015 ஆம் இலக்க 2017.03.07 ஆந் திகதியிட்ட கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட

ஆயுர்வேத திணைக்களத்தின் வெளிக்கள/ அலுவலக உத்தியோகத்தர்கள் - வகுதி 1 சேவைகளுக்குரிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு 2017.10.29 ஆந் திகதியன்று பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

| *பதவிகள்* | *வெற்றிட எண்ணிக்கை* |
|---|---|
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (தாவரவியல்) | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (உயிரியல் தொழில்நுட்பம்) | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (விவசாயம்) | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (தாவர அறிவியல்) | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (தாவர மருந்தியல்) | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (மருந்தாளர்) | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (மருத்துவ இரசாயனம்) | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (உயிரியல் இரசாயனம்) | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (உணவியல்) | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (தரக் கட்டுப்பாட்டாளர்) | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (மனித உயிரியல்) | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (பகுப்பாய்வு) | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (இரசாயனவியல்) | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (மூலக்கூறு உயிரியல்) | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (நச்சியியல்) | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (மருத்துவ நுண்ணுயிரியல்) | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (உயிர் உடலியல்) | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (சமூகவியல்) | 01 |

மேலே குறிப்பிட்ட ஆட்சேர்ப்புகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புகளுக்காக தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

1. **சம்பளம்** :

1.1 சம்பளக் குறியீட்டு இலக்கம்.- MN6-3/ 2016

1.2 சம்பள அளவுத்திட்டம்.- ரூபா 36,585 - 10 x 660 - 11 x 755 - 15 x 930 - ரூபா 65,440.

2. **ஆட்சேர்ப்புச் செய்யும் தரம்**.- II ஆந் தரம்.

3. **கல்வித் தகைமைகள்**.- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானமானி (விசேட) பட்டப்படிப்பு முதலாந்தரச் சித்தி அல்லது இரண்டாந்தர (மேல் பிரிவு) சித்தி அல்லது இரண்டாந்தர (கீழ்ப்பிரிவு) சித்தியடைந்திருத்தல் வேண்டும். மற்றும் உரிய துறையில் பட்டப்பின் படிப்பும் பெற்றிருத்தல் வேண்டும்.

| *பதவிப் பெயர்* | *தகைமைகள்* |
|---|---|
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (தாவரவியல்) | பட்டப்படிப்புக்கு உரிய பாடங்கள்.- தாவரவியல்/ வனவியல்/ சூழலியல்.<br><br>பட்டப்பின் படிப்புக்கு உரிய பாடங்கள்.- தாவரவியல்/வனவியல்/ சூழலியல்/மூலிகைத் தாவரங்களைப் பயன்படுத்துவது பற்றிய பட்டப்பின்படிப்பு |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (உயிரியல் தொழில்நுட்பம்) | பட்டப்படிப்புக்கு உரிய பாடங்கள்.- உயிரியல் இரசாயனம்/ மூலக்கூறு உயிரியல்/ செல் உயிரியல்<br><br>பட்டப்பின் படிப்புக்கு உரிய பாடங்கள்.- உயிரியல் இரசாயனம் மற்றும் மூலக்கூறு உயிரியல்/ செல் உயிரியல்/ உயிரியல் தொழில்நுட்பம் பற்றிய பட்டப்பின்படிப்பு |

| *பதவிப் பெயர்* | *தகைமைகள்* |
|---|---|
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (விவசாயம்) | பட்டப்படிப்புக்கு உரிய பாடங்கள்.- விவசாயம்/விவசாயவியல்<br><br>பட்டப்பின் படிப்புக்கு உரிய பாடங்கள்.- விவசாயம்/விவசாய விஞ்ஞானம்/ விவசாய உயிரியல் விஞ்ஞானம் பற்றிய பட்டப்பின்படிப்பு |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (தாவர அறிவியல்) | பட்டப்படிப்புக்கு உரிய பாடங்கள்.- தாவரவியல்/ தாவர அறிவியல்<br><br>பட்டப்பின் படிப்புக்கு உரிய பாடங்கள்.- தாவரவியல்/ தாவர அறிவியல்/ தாவர உடலியல்/ மூலிகைத் தாவரங்களைப் பயன்படுத்துவது பற்றிய பட்டப்பின்படிப்பு |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (தாவர மருந்தியல்) | பட்டப்படிப்புக்கு உரிய பாடங்கள்.- இரசாயனவியல்/உயிரியல் இரசாயனவியல்/ பகுப்பாய்வு இரசாயனவியல்<br><br>பட்டப்பின் படிப்புக்கு உரிய பாடங்கள்.- இரசாயனவியல்/ உயிரியல் இரசாயனவியல்/ பகுப்பாய்வு இரசாயனவியல்/ மூலிகைத் தாவரங்களைப் பயன்படுத்துவது பற்றிய பட்டப்பின்படிப்பு. |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (மருந்தாளர்) | பட்டப்படிப்புக்கு உரிய பாடம்.- மருந்தாளர்<br><br>பட்டப்பின் படிப்புக்கு உரிய பாடங்கள்.- இரசாயனவியல்/ உயிரியல் இரசாயனவியல்/ பகுப்பாய்வு இரசாயனவியல்/ மருத்துவ இரசாயனவியல் பற்றிய பட்டப்பின்படிப்பு. |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர்<br>(மருத்துவ இரசாயனம்) | பட்டப்படிப்புக்கு உரிய பாடங்கள்.- இரசாயனவியல்/பகுப்பாய்வு இரசாயனவியல்/ மருத்துவ இரசாயனவியல்<br><br>பட்டப்பின் படிப்புக்கு உரிய பாடங்கள்.- இரசாயனவியல்/ பகுப்பாய்வு இரசாயனவியல்/ மருத்துவ இரசாயனவியல் அத்துடன் மூலிகைத் தாவரங்களைப் பயன்படுத்துவது பற்றிய பட்டப்பின்படிப்பு |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர்<br>(உயிரியல் இரசாயனம்) | பட்டப்படிப்புக்கு உரிய பாடங்கள்.- இரசாயனவியல்/ உயிரியல் இரசாயனவியல்<br><br>பட்டப்பின் படிப்புக்கு உரிய பாடங்கள்.- இரசாயனவியல்/ உயிரியல் இரசாயனவியல்/ பகுப்பாய்வு இரசாயனவியல்/ தாவர அறிவியல்/ மருத்துவ இரசாயனவியல்/ கரிம இரசாயனவியல் பற்றிய பட்டப்பின்படிப்பு |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (இரசாயனவியல்) | பட்டப் படிப்புக்கு உரிய பாடங்கள்.- இரசாயனவியல்/உயிரியல் இரசாயனவியல்/ பகுப்பாய்வு இரசாயனவியல்<br><br>பட்டப்பின் படிப்புக்கு உரிய பாடங்கள்.- உயிரியல் இரசாயனவியல்/கரிம இரசாயனவியல் பற்றிய பட்டப்பின்படிப்பு |

| *பதவிப்பெயர்* | *தகைமைகள்* |
|---|---|
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (உணவியல்) | பட்டப் படிப்புக்கு உரிய பாடங்கள்.- உணவியல் மற்றும் தொழில்நுட்பம்/ உணவியல் மற்றும் போசணை<br><br>பட்டப்பின் படிப்புக்கு உரிய பாடங்கள்.- உணவியல் மற்றும் தொழில்நுட்பம்/ உணவியல் மற்றும் போசணை பற்றிய பட்டப்பின்படிப்பு |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (தரக் கட்டுப்பாட்டாளர்) | பட்டப்படிப்புக்கு உரிய பாடங்கள்.- இரசாயனவியல்/சூழலியல்<br><br>பட்டப்படிப்புக்கு உரிய பாடங்கள்.- தரக் கட்டுப்பாடு பற்றிய பட்டப்பின்படிப்பு |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (மனித உயிரியல்) | பட்டப்படிப்புக்கு உரிய பாடங்கள்.- மனித உயிரியல்<br><br>பட்டப்பின் படிப்புக்கு உரிய பாடங்கள்.- மனித உயிரியல்/ உடலியல்/ உயிரியல் பற்றிய பட்டப்பின்படிப்பு |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (பகுப்பாய்வு) | பட்டப்படிப்புக்கு உரிய பாடங்கள்.- இரசாயனவியல்/ பகுப்பாய்வு இரசாயனம், உயிரியல் இரசாயனவியல்/மருத்துவ இரசாயனவியல்<br><br>பட்டப்பின்படிப்புக்கு உரிய பாடங்கள்.- பகுப்பாய்வு இரசாயனம்/ மருத்துவ இரசாயனவியல் பற்றிய பட்டப்பின்படிப்பு |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (மூலக்கூறு உயிரியல்) | பட்டப்படிப்புக்கு உரிய பாடங்கள்.- உயிரியல் இரசாயனவியல் மற்றும்<br>மூலக்கூறு உயிரியல்<br><br>பட்டப்பின் படிப்புக்கு உரிய பாடங்கள்.- மூலக்கூறு உயிரியல் பற்றிய பட்டப்பின்படிப்பு |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (நச்சியியல்) | பட்டப்படிப்புக்கு உரிய பாடங்கள்.- இரசாயனவியல்/பகுப்பாய்வு இரசாயனவியல்/ உயிரியல் இரசாயனவியல்<br><br>பட்டப்பின் படிப்புக்கு உரிய பாடங்கள்.- நச்சியியல் பற்றிய பட்டப்பின்படிப்பு |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (மருத்துவ நுண்ணுயிரியல்) | பட்டப்படிப்புக்கு உரிய பாடம்.- நுண்ணுயிரியல்<br><br>பட்டப்பின்படிப்புக்கு உரிய பாடங்கள்.- மருத்துவ நுண்ணுயிரியல் பற்றிய பட்டப்பின்படிப்பு |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (சமூகவியல்) | பட்டப்படிப்புக்கு உரிய பாடம்.- சமூகவியல்<br><br>பட்டப்பின் படிப்புக்கு உரிய பாடங்கள்.- சமூகவியல் பற்றிய பட்டப்பின்படிப்பு |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (உயிர் உடலியல்) | பட்டப்படிப்புக்கு உரிய பாடங்கள்.- உடலியல்/உயிர் உடலியல்<br>பட்டப்பின் படிப்புக்கு உரிய பாடங்கள்.- உடலியல்/ உயிர் உடலியல்/ மருத்துவ உடலியல் பற்றிய பட்டப்பின்படிப்பு |

4. **தொழில்சார் தகைமைகள்.**- உரிய துறையில் அனுபவம் உள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

5. **அனுபவம்.**- உரிய துறையில் தொழில்சார் அனுபவம் இருத்தல் வேண்டும்.

6. **உடற் தகைமை.**- அனைத்துப் பரீட்சார்த்திகளும் இலங்கையில் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகைமைகள் இருத்தல் வேண்டும்.

7. **வேறு :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரிகள் சிறந்த நல்லொழுக்கத்தைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும் ;

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்ட தினத்தன்று எல்லாவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

8. **வயதெல்லை :**

8.1 ***ஆகக்குறைந்த வயதெல்லை.***- 21 வயதுக்குக் குறையாத

8.2 ***ஆகக்கூடிய வயதெல்லை.***- 35 வயதுக்கு மேற்படாத

9. **ஆட்சேர்ப்பு முறை.**- எழுத்துப் பரீட்சை மற்றும் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.

9.1 ***எழுத்துப் பரீட்சை :***

| *பாடங்கள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *சித்தியடைந்ததாகக் கருதப்படும் புள்ளிகள்* |
|---|---|---|
| உளச்சார்பு | 100 | 40% |
| தொழில்சார் விடய அறிவு | 100 | 40% |

9.2 ***பரீட்சை நடாத்தும் அதிகாரபீடம்.***- பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அல்லது ஆயுர்வேத ஆணையாளரினால் அங்கீகரிக்கின்ற நிறுவனத்தின் ஊடாக நடத்தப்படும்.

தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை :

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்* | *உச்சப் புள்ளிகளின் அளவு* | *தெரிவுசெய்வதற்காகப் பரிசீலிக்கப்படுகின்ற ஆகக் குறைந்த புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 25 | ஏற்புடையதாகாது |
| தொழில்சார் தகைமைகள் | 20 | |
| தொழில்சார் அனுபவம் | 20 | |
| கணினி பற்றிய ஆற்றல் | 15 | |
| மொழித் தேர்ச்சி | 15 | |
| நேர்முகப் பரீட்சையின்போது காட்டுகின்ற திறமை | 05 | |
| | 100 | |

**குறிப்பு :**

(1) மேலே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கப்படுகின்ற பிரதான துறைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள உச்சப் புள்ளிகள் உள்ளடங்கலாக, ஒவ்வொரு தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கான விரிவான புள்ளிகள் வழங்கும் நடைமுறைத் திட்டமொன்றை அங்கீகரித்தல் நியமன அதிகார பீடத்தினால் மேற்கொள்ளப்படும்.

(2) எழுத்துப் பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரர்கள் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு எழுத்துப் பரீட்சை மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் ஒழுங்குமுறை மற்றும் நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கையின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

10. **விண்ணப்பங்கள் கோரப்படும் முறை**.- அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரித்தல் அல்லது பத்திரிகை விளம்பரங்களில் பிரசுரித்தல் மற்றும் வெப் தளத்தின் ஊடாகப் பிரசுரித்தல்.

மேலே குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு அமைவாகத் தயாரித்த விண்ணப்பங்களை 2017.10.29 ஆந் திகதிக்கு முன்னர் ஆயுர்வேத ஆணையாளருக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை ஆயுர்வேதத் திணைக்களத்தின் வெளிக்கள/அலுவலக உத்தியோகத்தர்கள் வகுதி 1 சேவைகளுக்குரிய பதவிகள்" எனக் குறிப்பிடல் வேண்டும். போலியான அல்லது முழுமை பெறாதவாறு அனுப்பி வைக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனவும் மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன். (உரிய விண்ணப்பம் மற்றும் மேலதிக விபரங்களை www.ayurveda.gov.lk வெப் தளத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.)

எம். டீ. எம். டீ. கருணாதிலக,
ஆயுர்வேத ஆணையாளர்.

நாவின்ன,
மகரகம,
2017, செத்தெம்பர் 29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஆயுர்வேத திணைக்களத்தின் வெளிக்கள/அலுவலக உத்தியோகத்தர் - வகுதி 1 சேவைகளுக்குரிய பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் - திறந்த**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

2. முழுப்பெயர் :----.

3. (i) நிரந்தர முகவரி :----.

   (ii) தொலைபேசி இலக்கம் :----.

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

5. பிறந்த திகதி :----.

6. கல்வித் தகைமைகள் :

| பட்டம் | பல்கலைக்கழகம் | பட்டப்படிப்பை பூர்த்திசெய்த திகதி | கற்ற பாடங்கள் |
|---|---|---|---|
| | | | 1.<br>2.<br>3. |

7. தொழில்சார் தகைமைகள் :

| தொ. இல. | பாடநெறியின் பெயர் | கற்ற நிறுவனம் | காலப்பகுதி |
|---|---|---|---|
| 1.<br>2. | | | |

*உறுதிப்படுத்திய பிரதிகளை இணைக்கவும்.

8. உரிய துறையின் அனுபவம் பற்றிய விபரங்கள் :

| தொ. இல. | அனுபவம் பெற்ற துறை | காலப்பகுதி | நிறுவனம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |

9. வேறு தகைமைகள் :----.

என்னால் இதில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானது என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்ட ஏதும் விபரங்கள் போலியானது அல்லது பிழையானது எனத் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து என்னைத் தகுதியற்ற ஒருவராகக் கருதுவதற்கும் நியமிக்கப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து என்னை பணி நீக்கம் செய்ய முடியும் எனவும் நான் அறிவேன். அத்துடன் பரீட்சையை நடத்துவது தொடர்பில் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளரினால் பிறப்பிக்கப்படுகின்ற சட்ட ஒழுங்குவிதிகளுக்கும் மற்றும் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களுக்கும் நான் கீழ்ப்படிவேன் எனவும் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
கையொப்பம்.

திகதி :----.

கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ................................................................ என்பவர், ......................................... ஆந் திகதி மேலே குறிப்பிடப்பட்ட கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

(தயவுசெய்து உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்.)

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.**- அரசாங்க பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது சட்டத்தரணி அல்லது அரச சேவையில் ஈடுபடுகின்ற பதவிநிலை பதவியை வகிக்கின்ற உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

9-817

---

திருத்தம்

## நிதி ஆணைக்குழு

நிதி ஆணைக்குழுவின் III ஆம் தர ஆரம்ப மட்டத்திற்கான தேர்ச்சிபெற்ற சேவைப் பிரிவின் 4 சாரதி பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக தகுதி வாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2037 ஆம் இலக்க 2017.09.10 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின்பால் உங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. மேலே குறிப்பிடப்பட்ட சாரதிப் பதவிக்கான தமிழ் மொழி மூலமான விண்ணப்பப்படிவத்தினை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். (www.documents.gov.lk).

3. விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2017, ஒற்றோபர் 06 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

4. ஆட்சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விபரங்கள் மாற்றஞ் செய்யப்படவில்லை என்பதைக் கவனத்திற் கொள்க.

5. 2017.09.15 ஆந் திகதி வெளியிடப்பட்ட அறிவித்தலின் விண்ணப்பப்படிவம் கீழே பிரசுரிக்கப்படுகிறது.

ஏ. ரீ. எம். யூ. டி. பி. தென்னகோன்,
செயலாளர்,
நிதி ஆணைக்குழு.

நிதி ஆணைக்குழு,
2017, செத்தெம்பர் 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நிதி ஆணைக்குழு**

சாரதிகள் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பப்படிவம் (பி. எல். - III)

(அலுவலக உபயோகத்திற்கு)

1. முழுப்பெயர் :----.
2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :----.
3. நிரந்தர முகவரி :----.
4. பால் :----.
5. பிறந்த திகதி :----.
6. வாகன அனுமதிப்பத்திரத்தின் இலக்கமும் திகதியும் :----.
7. தொலைபேசி இலக்கம் (கையடக்க/ நிரந்தர) :----.
8. விவாக நிலை :----.
9. வதியும் மாவட்டம் :----.
10. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சா. த.) பரீட்சை விபரங்கள் :

| இல. | பாடம் | தரம் | ஆண்டு | இல. | பாடம் | தரம் | ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | | | | 6. | | | |
| 2. | | | | 7. | | | |
| 3. | | | | 8. | | | |
| 4. | | | | 9. | | | |
| 5. | | | | 10. | | | |

11. பதவியுடன் தொடர்புடைய அனுபவம் :----.
12. ஏனைய தகைமைகள் :----.
13. தாங்கள் எப்பொழுதாவது ஏதாவது குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டுள்ளீர்களா ? :----.

14. விண்ணப்பதாரியின் கூற்று :

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்ட தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரை சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். நான் ஆட்சேர்ப்பிற்கு முன்னரோ அல்லது பின்னரோ இப்பதவிக்கு தகுதியற்றவன் எனக் காணப்படுமிடத்து எதுவித இழப்பீடும் இன்றி பதவி நீக்கம் செய்யப்படுவதனை ஏற்றுக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9-892

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## உள்ளக அலுவல்கள், வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பப்படிவம் கோரல்

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தில் நிலவும் கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தேசிய நூதனசாலை திணைக்களத்திற்குப் பதிலாக, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2018, சனவரி மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் போட்டிப் பரீட்சைக்கு இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.

1. **கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) சார் சேவை வகை :**

| | | |
|---|---|---|
| நூதனசாலை பாதுகாப்பு அலுவலர் | - | பதவி வெற்றிடங்கள் 06 |
| பூச்சியியல் உதவியாளர் | - | பதவி வெற்றிடங்கள் 02 |
| தாவரவியல் உதவியாளர் | - | பதவி வெற்றிடங்கள் 01 |
| மானிடவியல் உதவியாளர் | - | பதவி வெற்றிடங்கள் 01 |
| விலங்கியல் உதவியாளர் | - | பதவி வெற்றிடங்கள் 01 |
| பாதுகாப்பு உதவியாளர் | - | பதவி வெற்றிடங்கள் 01 |

1.1 ***கல்வித் தகைமைகள் :***

* சிங்களம்/தமிழ், ஆங்கிலம், கணிதம் உட்பட ஏனைய இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

* தொழில் தொடர்பான பாடநெறிகளில் இரண்டு (02) பாடங்களுடன் கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தரப்) பரீட்சையில் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (தகைமைகள் பின்வருமாறு காணப்படல் வேண்டும்.)

***தகைமைகள்.***- கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தரப்) பரீட்சை :

| பதவி | தகைமைகள் : கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தரப்) பரீட்சை |
|---|---|
| பூச்சியியல் உதவியாளர் | கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தரப்) பரீட்சையில் உயிரியல் பாடத்துடன் உயிரியல் பிரிவுக்குரிய பாடங்கள் இரண்டில் (02) ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின்படி விலங்கியல் பாடத்துடன் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அவசியம்.) |
| மானிடவியல் உதவியாளர் | கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தரப்) பரீட்சையில் கலைப்பிரிவில் இரண்டு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின்படி மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அவசியம்.) |

| பதவி | தகைமைகள் : கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தரப்) பரீட்சை |
|---|---|
| விலங்கியல் உதவியாளர் | கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தரப்) பரீட்சையில் உயிரியல் பாடத்துடன் உயிரியல் பிரிவுக்குரிய பாடங்கள் இரண்டில் (02) ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின்படி விலங்கியல் பாடத்துடன் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அவசியம்.) |
| தாவரவியல் உதவியாளர் | கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தரப்) பரீட்சையில் உயிரியல் பாடத்துடன் உயிரியல் பிரிவுக்குரிய பாடங்கள் இரண்டில் (02) ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின்படி தாவரவியல் பாடத்துடன் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அவசியம்.) |
| பாதுகாப்பு உதவியாளர் | கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தரப்) பரீட்சையில் இரசாயனவியல் பாடத்துடன் இரண்டு பாடங்களில் (02) ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின்படி இரசாயனவியல் பாடத்துடன் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அவசியம்.) |
| நூதனசாலை பாதுகாப்பு அலுவலர் | கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தரப்) பரீட்சையில் உயிரியல் பாடத்துடன் உயிரியல் பிரிவுக்குரிய பாடங்கள் இரண்டில் (02) ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் ; அல்லது கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தரப்) பரீட்சையில் கலைப் பிரிவில் வரலாறு பாடத்துடன் பாடங்கள் இரண்டில் (02) ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின்படி மேற்குறிப்பிடப்பட்ட பாடங்களுடன் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.) |

1.2 தொழிற் தகைமைகள் :

| பதவி | தகைமைகள் : கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தரப்) பரீட்சை |
|---|---|
| பூச்சியியல் உதவியாளர் | அம்பாறை ஹாடி நிறுவனத்தினூடாக வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (விவசாயம்) பாட நெறியைத் தொடர்ந்திருத்தல். |
| விலங்கியல் உதவியாளர் | அம்பாறை ஹாடி நிறுவனத்தினூடாக வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (விவசாயம்) பாட நெறியைத் தொடர்ந்திருத்தல். |
| தாவரவியல் உதவியாளர் | அம்பாறை ஹாடி நிறுவனத்தினூடாக வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (விவசாயம்) பாட நெறியைத் தொடர்ந்திருத்தல். |

**குறிப்பு**.- மானிடவியல் உதவியாளர், பாதுகாப்பு உதவியாளர், நூதனசாலை பாதுகாப்பு அலுவலர் ஆகிய பதவிகளில் பயிலுநர் சேவைக்கு மாத்திரமே ஆட்சேர்ப்பு நடைபெறும்.

பூச்சியியல் உதவியாளர், விலங்கியல் உதவியாளர் மற்றும் தாவரவியல் உதவியாளர் ஆகிய பதவிகளுக்கு மேல் குறிப்பிட்ட 1.1 இல் குறிப்பிடப்பட்ட அடிப்படைக் கல்வித் தகைமைகளுடன் 1.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்தகைமை பெற்றிருப்பின் தொழில்நுட்ப சேவையில் தரம் III இல் சேர்த்துக்கொள்ளப்படுவீர்கள். தொழில் தகைமை பெறத் தவறியிருப்பின் பயிலுநர் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவீர்கள்.

1.3 ***வேறு தகைமைகள் :***

(அ) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) நன்னடத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) 2017.10.30 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் காணப்படல் வேண்டும். (அதன்படி 1999.10.30 ஆந் திகதிக்கு முன் அல்லது 1972.10.30 ஆந் திகதிக்குப் பின் பிறந்த திகதியைக் கொண்டிருப்பின் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் ஆவர்.) ;

(ஈ) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன் ஆட்சேர்ப்புக்குரிய அனைத்துத் தகைமைகளும் பூர்த்திசெய்யப்படல் வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்**.- MN3-2016 - ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550.

2016.02.25 ஆந் திகதியின் 03/ 2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபத்தின்படி III ஆம் வகுப்புக்குரிய சம்பள அளவுத்திட்டத்தின்கீழ் பணிக்கு அமர்த்தப்படுவீர்கள். பயிலுநர் சேவைக்கு அமர்த்தப்படுவோருக்கு மேல் குறிப்பிட்ட சுற்றறிக்கை பிரகாரம் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

3. **ஆட்சேர்ப்பு முறைகள்.**- எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வுகள் மூலம் பெறப்படும் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைபெறும். எழுத்துமூலப் பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் பெறும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பிற்காக எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையானோர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு உரிய தகைமையுடையோர் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

3.1 ***எழுத்துப் பரீட்சை :***

| பாடங்கள் | நேரம் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியெய்த வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. உளச்சார்புப் பரீட்சை | 01 மணி | 100 | 40 |
| 2. விடயத்திற்குரிய பாட அறிவு | 01 மணி | 100 | 40 |

3.2 ***எழுத்துமூலப் பரீட்சைக்கான பாடவிதானங்கள் :***

| வினாத்தாள் | பாடவிதானங்கள் | காலம் |
|---|---|---|
| 1. உளச்சார்பு | விண்ணப்பதாரியின் தர்க்கத் திறன் மற்றும் கணிதத் திறமைகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்யும் வகையிலும், சுருக்கமாக விடையளிக்கக்கூடிய வகையிலும் அமைந்துள்ள 40 வினாக்களை உள்ளடக்கிய பல்தேர்வு வினாப்பத்திரம். | 01 மணி |
| 2. விடயத்திற் குரிய பாட அறிவு | பொது அறிவு வினாக்கள் 15 மற்றும் ஒவ்வொரு பதிவிற்கும் உரிய விடயத் தேர்வு 25 ஆவதுடன் கூடிய பல்தேர்வு வினாப்பத்திரம் ஆகும். | 01 மணி |
| | பதவிகளுக்குரிய பாடவிதானங்கள் | |
| | (1) பூச்சியியல் உதவியாளர் பதவி<br>1. விலங்கு இராச்சியத்தில் ஆத்திரபோடா கனத்தில் (phylium arthrapoda) பூச்சி வர்க்கம் பற்றிய விளக்கம் (class insect)<br>2. பரிசோதனைக்கூட உபகரணங்கள் பற்றிய விளக்கம்<br>3. சுற்றாடலியல் தொடர்பான அடிப்படை அறிவு | |
| | (2) மானிடவியல் உதவியாளர்<br>1. இலங்கையின் சம்பிரதாயம் சமூக அம்சங்களின் விளக்கம் மற்றும் கலை பற்றிய விளக்கம் தொடர்பான அடிப்படை அறிவை பரிசோதித்தல் | |
| | (3) விலங்கியல் உதவியாளர்<br>1. விலங்கு இராச்சியம் பற்றிய விளக்கம்<br>2. பரிசோதனைக்கூட உபகரணங்கள் பற்றிய விளக்கம்<br>3. சுற்றாடலியல் தொடர்பான அடிப்படை அறிவைப் பரிசோதித்தல் | |
| | (4) தாவரவியல் உதவியாளர்<br>1. தாவர இராச்சியம் தொடர்பான அறிவு<br>2. பரிசோனைக்கூட உபகரணங்கள் தொடர்பான விளக்கம்<br>3. சுற்றாடலியல் தொடர்பான அடிப்படை அறிவைப் பரிசோதித்தல் | |

| வினாத்தாள் | பாடவிதானங்கள் |
|---|---|
| | (5) பாதுகாப்பு அலுவலர்<br><br>1. இரசாயனவியல் தொடர்பான அடிப்படை அறிவு<br>2. பரிசோதனைக்கூட உபகரணங்கள் மற்றும் உரிய துறைசார் உபகரணங்கள் பற்றிய அறிவு |
| | (6) நூதனசாலை பாதுகாப்பு அலுவலர்.- விஞ்ஞானப் பிரிவு : விலங்கியல் மற்றும் தாவரவியல் தொடர்பான அறிவு<br>கலைப்பிரிவு : இலங்கை கலாசார அம்சங்கள், பாரம்பரியம் மற்றும் வரலாறு பற்றிய அடிப்படை அறிவு |

4.

4.1 ***பரீட்சை நிபந்தனைகள் :***

(i) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடைபெறும். விண்ணப்பதாரர்கள் விரும்பிய எந்த மொழியிலும் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்பதோடு பரீட்சையில் எல்லா வினாத்தாள்களுக்கு ஒரே மொழியில் விடையளித்தல் அவசியம். விண்ணப்பதாரரின் சொந்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி மூலம் பின்னர் மாற்றப்பட இடமளிக்கப்பட மாட்டாது. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் அனைத்து வினாத்தாள்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(ii) பரீட்சைக் கட்டணம் ரூ. 600 ஆகும். பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003.02.13 என்பதன் கீழ் நாட்டின் எந்தவொரு தபால் நிலையத்திலோ அல்லது உப தபால் நிலையத்திலோ செலுத்தப்படலாம். அவ்வாறு பரீட்சார்த்தியின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டானது விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டப்படல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் காசுக்கட்டளை மூலமோ அல்லது முத்திரை மூலமோ செலுத்தப்படலாகாது. பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதி ஒன்றை எதிர்கால பயன்பாட்டிற்காக பரீட்சார்த்தியுடன் வைத்துக்கொள்ளல் பிரயோசனப்படலாம்.

(iii) பரீட்சைகளுக்காக செலுத்தப்படும் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படவோ அல்லது வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவோ முடியாது.

(iv) இப்பரீட்சையானது 2018, சனவரி மாதம் கொழும்பில் நடைபெறும். பரீட்சைகள் நடைபெறும் திகதி பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். உங்களால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்படும். வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை உடையோர் மாத்திரம் விண்ணப்பித்திருக்கலாம் எனும் கணிப்பிலும், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லை பூர்த்திசெய்திருக்கும் விண்ணப்பதாரர்களுக்கும், விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை அனுமதி அட்டை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்படும். இதற்கு ஒத்ததாக அதனை அறிவிப்பதற்கான பத்திரிகை அறிவித்தலானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்படும் திகதிக்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னும் பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளைக்கு அறிவித்தல் வேண்டும். பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். கொழும்பின் வெளியில் எனின், குறித்த விபரங்களுடன் அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்கான தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தையும் கொண்ட உமது கோரிக்கைக் கடிதத்தை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு தொலைநகல் (பெக்ஸ்) மூலம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியையும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியையும், பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டுடன் இணைத்து அனுப்புவது பயனுள்ளதாக அமையும். விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதாகக் கருதப்படலாகாது.

(v) பரீட்சை நடைபெறுவது மற்றும் பரீட்சைப் பெறுபேறு பற்றியும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்படும் நிபந்தனைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவீர்கள். அந்நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு உட்படுவீர்கள்.

(vi) பரீட்சைப் பெறுபேறுகள்.- எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் 40% இற்குக் குறையாமல் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்கள் அல்லது வெற்றிடங்களுக்குச் சமனான எண்ணிக்கையானோரின் பெயர் உள்ளடக்கப்படும் பெயர்ப்பட்டியல் தேசிய நூதனசாலை திணைக்களப் பணிப்பாளருக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்துப் பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் அவர்களது சொந்த முகவரிக்கு அனுப்பி வைப்பதற்கும் அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடவும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

**குறிப்பு**.- பரீட்சைகளுக்குத் தோற்றும் தினம் தம் கையொப்பம் உறுதிப்படுத்திய அனுமதி அட்டையைப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

4.2 ***சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்***.- இப்பதவி நிரந்தரமானது. தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கொள்கைத் திட்டங்களுக்கமைய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுமிடத்து தாங்கள் அதற்குக் கட்டுப்பட்டவர்களாவீர்கள். இப்பதவி மூன்று வருடகால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. விண்ணப்பதாரிகள் இப்பதவியில் சேர்த்துக்கொள்ளப்பட்டால் கட்டாயமாக விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

5. **விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும் முறை :**

5.1 விண்ணப்பங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம் A4 அளவிலான கடதாசியில் இரு பக்கத்தையும் உபயோகித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழி மூலம் குறிப்பிடப்பட்டு விண்ணப்பதாரியின் கையெழுத்தில் பூர்த்திசெய்யப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் அவசியமாகும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும், பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு உரிய கூட்டில் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதை உறுதிசெய்து கொள்ளவும். இலக்கம் 1 தொடக்கம் 8 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும், இலக்கம் 9 தொடக்கம் 14 வரையான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும், இலக்கம் 15 தொடக்கம் 18 வரையான பந்திகள் மூன்றாம் பக்கத்திலும் அமையும் வகையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு என்பனவற்றின் பிரதிகளை தங்களிடம் வைத்திருப்பது பயனுடையதாகும்.

5.2 குறிப்பிட்ட மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2017.10.30 ஆந் திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும் வகையில் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம். ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

5.3 ஒழுங்குமுறைப்படி தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும், விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் முன்னறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதென அறிவிக்கப்படவும் மாட்டாது.

5.4 விண்ணப்பப்படிவங்களை உறையிலிட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) சார் சேவை வகை" என எழுதப்படல் வேண்டும்.

6. **கையொப்பத்தை உறுதிசெய்தல் :**

* வணக்கத்திற்குரிய மதத் தலைவர் அல்லது சமாதான நீதவான் அல்லது அரச பாடசாலை அதிபர் அல்லது வருடத்திற்கு 2,40,360 ரூபா சம்பளம் பெறும் அரச பதவிநிலை உத்தியோகத்தர் ஆகியவர்கள் எவரேனும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

* இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது பரீட்சார்த்திகள் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தமது அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக கீழ்க்காணும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

7. **வேறு**.- சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் காணப்படும் விடயங்களில் ஏதேனும் முரண்பாடு காணப்படுமிடத்து சிங்கள மொழி மூல அறிவித்தலே மேலோங்கும். இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத எந்தவொரு விடயம் தொடர்பாகவும், ஆட்சேர்ப்பு பற்றிய விடயங்கள் தொடர்பாகவும் தேசிய நூதனசாலைகள் திணைக்களப் பணிப்பாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

பணிப்பாளர் (பதிற் கடமை),
தேசிய நூதனசாலைகள் திணைக்களம்.

தேசிய நூதனசாலைகள் திணைக்களம்,
இல. 53, ஸ்ரீமத் மாக்கஸ் பெர்னாந்து மாவத்தை,
கொழும்பு 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் .................................................... பதவி**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை மேலுள்ள கூட்டில் இடவும்)

2. விண்ணப்பிக்கும் பதவி :

(1) நூதனசாலை பாதுகாப்பு அலுவலர்
(2) பூச்சியியல் உதவியாளர்
(3) தாவரவியல் உதவியாளர்
(4) மானிடவியல் உதவியாளர்
(5) விலங்கியல் உதவியாளர்
(6) பாதுகாப்பு உதவியாளர்

(உரிய இலக்கத்தை மேலுள்ள கூட்டில் இடவும்)

3. விண்ணப்பதாரியின் பெயர் :

3.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :

(i) சிங்களத்தில்/ தமிழில் :----.
(ii) ஆங்கிலத்தில் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3.2 முதலெழுத்துக்களுக்குரிய பெயர்கள் :

(i) சிங்களத்தில்/ தமிழில் :----.
(ii) ஆங்கிலத்தில் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

4. அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி :

(i) ஆங்கிலத்தில் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(ii) சிங்களத்தில்/ தமிழில் :----.

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

6. ஆண்/ பெண் :

ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தை மேலுள்ள கூட்டில் இடவும்)

7. முகவரி :

(i) சொந்த முகவரி :----.
(ii) மாவட்டம் :----.
(iii) அலுவலக முகவரி (தொழில் செய்வதாயின்) :----.

8. தொலைபேசி இலக்கம் :

சொந்த :----. அலுவலகம் :----.

9. பிறந்த திகதி :

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

2017.10.30 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

10. விவாகமானவரா/ விவாகமாகாதவரா ? :----.

11. பிரசாவுரிமை (வம்சாவழியாக/ பதிவு மூலம்) :----.

12. கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. த.)
பரீட்சை சுட்டிலக்கம் :----.
வருடம் :----.
மொழி மூலம் :----.

| சித்திபெற்ற பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. .......................................... | ................ |
| 2. .......................................... | ................ |
| 3. .......................................... | ................ |
| 4. .......................................... | ................ |
| 5. .......................................... | ................ |
| 6. .......................................... | ................ |
| 7. .......................................... | ................ |
| 8. .......................................... | ................ |

(ii) க. பொ. த. (உ. த.)
பரீட்சை சுட்டிலக்கம் :----.
வருடம் :----.
மொழி மூலம் :----.

| சித்திபெற்ற பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. .......................................... | ................ |
| 2. .......................................... | ................ |
| 3. .......................................... | ................ |
| 4. .......................................... | ................ |

13. தொழிற்தகைமைகளும், விசேட திறமைகளும் :

| பாடநெறி | நிறுவனம் | விடயங்கள் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |

14. அனுபவங்கள் பற்றிய விபரம் :

| பதவி | நிறுவனம் | சேவையாற்றிய காலப்பகுதி |
|---|---|---|
| | | |

15. உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இலக்கம் .......................... கொண்ட பற்றுச்சீட்டு கீழுள்ள பெட்டியில் ஒட்டப்பட்டுள்ளது :

| |
|---|
| |

தற்போது சேவையிலிருப்பதாயின் அதுபற்றிய விபரங்கள் :

(1) பதவியும் தரமும் :----.
(2) நியமனத் திகதி :----.
(3) நிறுவனம் :----.
(4) ஓய்வூதியத்துடனான பதவியா இல்லையா என்பது :----.

விண்ணப்பதாரரின் உறுதியுரை :

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்குத் தெரிந்தவரையில் உண்மையானவையும், சரியானவையும் என உறுதிப்படுத்திக் கூறுகின்றேன். இத்தகவல்கள் பிழையானவை அல்லது பொய்யானவை என இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து நான் இப்பதவிக்குத் தகுதியற்றவர் எனவும், இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து இப்பதவி இரத்துச் செய்யப்படும் எனவும் நான் நன்கறிவேன். மேலும் பரீட்சை நடைபெறுதல் அல்லது பரீட்சைப் பெறுபேறு வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்படும் அனைத்து நிபந்தனைகளுக்கும் உட்பட்டுள்ளேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

16. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற ........................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கறிவேன் எனவும், அவர் பரீட்சைக் கட்டணம் செலுத்தி, அப்பற்றுச்சீட்டு உரிய இடத்தில் ஒட்டப்பட்டுள்ளது என்பதையும், ... ............................ ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் இவ்விண்ணப்பத்தில் கையொப்பமிட்டுள்ளார் எனவும் உறுதிமொழிகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
உத்தியோகபூர்வ முத்திரை :----.
திகதி :----.

17. அரச சேவை அல்லது மாகாண அரச சேவையில் தற்போது சேவையிலிருக்கும் விண்ணப்பதாரியாயின் திணைக்களத் தலைவரின் சான்றுரை :

விண்ணப்பதாரியாகிய திரு./திருமதி/செல்வி ......................................... என்பவர் ..................................... அமைச்சில்/ திணைக்களத்தில் நிரந்தரப் பதவி வகிப்பவர் எனவும், அவர் குறித்த நியமனத்திற்குத் தெரிவுசெய்யப்படுவாராயின் தற்போதைய சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியுமெனவும்/ முடியாதெனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
உத்தியோகபூர்வ முத்திரை :

திகதி :----.

9-851

## அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விசேட தரத்துக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விசேட தரத்துக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் எழுத்துப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் சனவரி மாதம் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2. இப்பரீட்சை கீழ்க்குறிப்பிடப்படும் நகரங்களில் நடாத்தப்படும். பரீட்சை நிலையங்கள் ஸ்தாபிக்கப்படும் நகரங்கள் மற்றும் அதற்குரிய நகர இலக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| பதுளை | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |

மேலே குறிப்பிடப்பட்ட ஏதேனும் நிலையம் ஒன்றுக்கான எண்ணிக்கை போதியளவானதாகக் காணப்படாதுவிடின் மேற்படி பரீட்சை நிலையம் இரத்துச்செய்யப்பட்டு மேற்படி விண்ணப்பதாரிகள் அருகிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு மாற்றப்படுவார்கள். விண்ணப்பிக்கும் நகரத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. மேலும் உத்தேசிக்கப்பட்ட நகரங்கள் அனைத்திலும் அல்லது அதிக எண்ணிக்கையில் அல்லது பரீட்சை நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு போதிய அளவு விண்ணப்பதாரிகள் காணப்படாதவிடத்து பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

3. இப்பரீட்சையினைப் பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைய பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

4. 2017.12.31 ஆந் திகதியன்று விசேட தர வெற்றிடங்களில் 50% இனைக் கொண்டவர்களுக்குரிய நியமனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைவதற்காக குறித்த ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40 புள்ளிகளைப் பெற வேண்டும். தகைமையுடைய விண்ணப்பதாரிகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றின் மூலம் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் நியமனங்கள் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சையில் விண்ணப்பதாரிகளின் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களைப் பரீட்சிப்பதற்காக மாத்திரம் அமைவதோடு அங்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

5. பொது நிர்வாகச் சுற்றறிக்கை 2016.02.25 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 03/2016 இன் MN 07 - 2016 சம்பளத் தொகுதி இப்பதவிக்கு உரித்தாவதுடன் அதற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 41,580 - 11 x 755 - 10 x 1,080 - ரூபா 68,425 ஆகும். அச்சம்பளம் உமக்கு உரித்துடையதாவது 2020.01.01 ஆந் திகதி முதலாகும். அச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கு அமைய நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி முதல் சம்பளம் வழங்கப்படும்.

6. **பூர்த்திசெய்யப்பட வேண்டிய தகைமைகள்**.- இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமையினைப் பெறுவது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதிக்கு உடன் முன்னரான 05 வருட திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்துள்ள இணைந்த சேவைக்குட்பட்ட -

(அ) அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I இலுள்ள அலுவலர்கள் ; அல்லது

(ஆ) குறைந்தபட்சம் சேவையில் 8 வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் II இலுள்ள அலுவலர்கள் ; அல்லது

(இ) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டத்தினைப் பெற்று அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் 05 வருட தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்கள்.

7. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்ததாக இருத்தல் வேண்டும். தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி 25.5 செ. மீ. x 21 செ. மீ. (ஏ4) அளவிலான தாளில் விண்ணப்பங்களைத் தயாரித்து தமது சொந்தக் கையெழுத்தினாலேயே பூர்த்திசெய்தல் வேண்டும். 1 முதல் 4 வரையான இலக்கங்கள் முதலாம் பக்கத்திலும், 5 தொடக்கம் 10 வரையான இலக்கங்கள் இரண்டாம் பக்கத்திலும், எஞ்சிய இலக்கங்கள் மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளனவா என்பதை விண்ணப்பதாரர் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும் முழுமையாகத் தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பப்படிவங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் உரிய மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும். பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். (பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.)

(ஆ) விண்ணப்பதாரிகளால் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அதன் நிழற்படப் பிரதியொன்றுடன் தமது திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். தலைவரின் பரிந்துரையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் நிழற்படப்பிரதியை சுய விபரக்கோவையில் உள்ளடக்குதல் வேண்டும். அதன் பின்னர் மூலப்பிரதியை தமது திணைக்களத் தலைவரூடாக "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி 1503, கொழும்பு" என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக 2017.10.30 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். திணைக்களத் தலைவரூடாக அனுப்பப்படும் விண்ணப்பப்படிவத்துக்கு மேலதிகமாக வேறு எதுவித விண்ணப்பப்படிவங்களின் பிரதிகளையும் தனிப்பட்ட வகையில் அனுப்பிவைத்தல் ஆகாது. உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவமும் சகல வகையிலும் முழுமைப்படுத்தப்பட்டதென திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதோடு விண்ணப்பப்படிவத்திலுள்ள 14 ஆவது உறுதியுரையிலும் கையொப்பமிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் அல்லது அத்திணைக்களத்தின் பிற அலுவலருக்கோ அல்லது தனிப்பட்ட முகவரிக்கோ அனுப்பப்படுதலாகாது. விண்ணப்பப்படிவங்கள் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விசேட தரத்துக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தின் போதான விண்ணப்பதாரர்களின் பதவி மற்றும் சேவை நிலையம் என்பன பரீட்சை தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையதாவதோடு விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக ஏற்படும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(இ) (i) முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. முதற் தடவையாகத் தோற்றும் விண்ணப்பதாரிகளெனக் கருதப்படுவது பொது எழுதுவினைஞர் சேவையில் விசேட தரத்துக்கு 1980, 1982, 1983, 1984, 1985, 1986, 1987, 1988, 1989, 1991, 1996, 1999 அல்லது 2001 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றாத விண்ணப்பதாரர்கள் மற்றும் 1985 மற்றும் 1996 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட அரச தட்டெழுத்தாளர் சேவையின் விசேட தரத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றாத விண்ணப்பதாரர்கள் மற்றும் 1996 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அரச சுருக்கெழுத்தாளர் சேவையின் விசேட தரத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றாத விண்ணப்பதாரர்கள் மற்றும் 1999 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அரச புத்தக கட்டுநர் சேவையின்/ அரச சிறாப்பர் சேவையின் அல்லது அரச களஞ்சியப் பொறுப்பாளர் சேவையின் விசேட தரத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு மற்றும் 2006, 2007, 2011 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விசேட தரத்துக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் ஒரு பரீட்சைக்கேனும் தோற்றாத விண்ணப்பதாரர்கள் மட்டுமே ஆவர்.

(ii) பரீட்சைக்கான கட்டணம் ரூபா 600 ஆகும். மேலும் இக்கட்டணத்தை நாட்டில் எந்தவொரு தபாலகம்/ உப தபாலகத்தில் பணமாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் வரவு வைப்பதற்காக செலுத்துதல் வேண்டும். பணம் செலுத்தியமைக்காகப்

பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டிவிட வேண்டும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் வேறு பரீட்சை ஒன்றுக்கு மாற்றப்படவும் மாட்டாது. பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனளிக்கும்.

(ஈ) விண்ணப்பப்படிவமோ அல்லது அது தொடர்பான கடிதம் ஒன்றோ தபாலில் தொலைந்துவிட்டதாகவோ தாமதமானதாகவோ கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(உ) விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

8. **பரீட்சைக்கு அனுமதித்தல் :**

(அ) உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உரிய முறையில் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்து உரிய திகதிக்கு முன்னர் அனுப்பியுள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரங்கள் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரங்களை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியிடம் பரீட்சைத் தினத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறான அனுமதிப்பத்திரம் ஒன்றைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்காகத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் கையாளவேண்டிய விதிக்கோவை ஒன்று இவ்வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படுகின்றது. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்ட விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் அறிவிப்பொன்று வெளியிடப்படும். அத்தகைய அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். உங்களிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருப்பின் அதன் பிரதியும் தங்களது முழுப்பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பனவற்றைக் குறிப்பிட்டு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டுமென்பதுடன், கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின் மேற்படி விபரங்களுடனான ஒரு கோரிக்கைக் கடிதம் மற்றும் அனுமதி அட்டை அனுப்புவதற்கு ஏதுவாக ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கம் என்பவற்றை தொலைநகல் ஊடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பி விசாரித்தல் பயனளிக்கக்கூடும்.

**குறிப்பு**.- பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமையானது பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையில் தோற்றுவதற்கான தகுதியினைக் கொண்டுள்ளார் என்பதனை அவசியமாகக் கருதாது.

9. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

10. **பிழையான தகவல்கள் அளிப்பதற்கான தண்டனை :**

(அ) இப்பரீட்சைக்குரிய ஒழுங்குவிதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் அதற்குத் தோற்றுவதற்கு தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் அளித்துள்ள தகவல்கள் பிழையானவை எனப் பிற்காலத்தில் தெரியவந்தால் அல்லது வேண்டுமென்று ஏதேனும் ஒரு விடயத்தை மூடிமறைத்திருப்பதாக வெளிவந்தால் அவர் மேலும் ஒரு நியமனம் பெறுவதற்காக கவனத்திற்கொள்ளப்படாததுடன் இப்பரீட்சை காரணமாக வழங்கப்பட்டுள்ள ஒரு நியமனத்தை இல்லாதொழிக்கவும் அல்லது பதவி நீக்கத்திற்கும் ஆளாவார்.

*11.* ***பரீட்சை மொழி ஊடகம்.*** *- இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் சேவைக்குச் சேர்வதற்காக பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தில் அல்லது அரச கரும மொழி ஒன்றில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.*

*12.* ***பரீட்சைத் திட்டம்.*** *- எழுத்துப் பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :*

| *வினாத்தாள்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* |
|---|---|---|
| (1) அலுவலக முகாமை | 02 மணித்தியாலம் | 100 |
| (2) அலுவலக முறைமைகள் | 02 மணித்தியாலம் | 100 |
| (3) தாபன செயற்பாடுகள் மற்றும் செயலொழுங்கு விதிகள் | 02 மணித்தியாலம் | 100 |
| (4) அரச நிதி முகாமை | 02 மணித்தியாலம் | 100 |
| (5) பொது வினாத்தாள் | 1 1/ 2 மணித்தியாலம் | 100 |

*13.* ***பாடத்திட்டம்.*** *- பரீட்சார்த்திகளிடமிருந்து பின்வரும் பாடங்கள் பற்றி அறிவு எதிர்பார்க்கப்படுகின்றது :-*

(i) *அலுவலக முகாமை (காலம் : 2 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்*

*ஒழுங்குக் கட்டமைப்பு, ஒழுங்கமைப்பு தொடர்பான அடிப்படைகள், பணிப் பகுப்பாய்வு, பணி மதிப்பீடு, தலைமைத்துவம், மேற்பார்வை, தீர்மானம் எடுக்கும் ஆற்றல், தொடர்பாடல், மக்கள் தொடர்பு, ஒருங்கிணைப்பும் மற்றும் முரண்பாட்டுத் தீர்வு.*

(ii) *அலுவலக முறைகள் (காலம் : 2 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்*

*அலுவலக முறைமைகள் பற்றிய அடிப்படைகள், அலுவலக நடைமுறைகள், ஆவணங்கள் மற்றும் கோவைப்படுத்தல், மாதிரிப் படிவங்களை திட்டமிடல், கடிதங்களைப் பரிமாறுதல், அலுவலக உபகரணங்களின் பயன்பாடு பற்றிய கட்டுப்பாடு, அலுவலக தளக்கோலம் மற்றும் சுற்றுப்புறம், தொழில் விபரம், பணி ஆய்வு மற்றும் முறைமை ஆய்வு, பணி அளவீடு, அலுவலகச் செயற்பாட்டுக் கைநூல்.*

(iii) *தாபன செயற்பாடுகள் மற்றும் செயலொழுங்கு விதிகள் (காலம் : 2 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்*

*அரச சேவைக்கு ஆட்சேர்க்கும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், அரச அலுவலர்களின் தாபனச் செயற்பாடுகள், தனிப்பட்ட கோவைகளின் பராமரிப்பு, அரச ஊழியர்களை நியமனம் செய்தல், இடமாற்றம், தரவுயர்வு வழங்கல், சேவையை முடிவுறுத்தல் ஆகிய பணிகளுக்கான அதிகாரங்களை ஒப்படைத்தல், நலனோம்பல், அரசாங்க அலுவலர்களுக்கு உரித்தான சிறப்புரிமைகள், தாபனச் செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கத்தினால் இதுவரை வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள் தொடர்பான பொதுவான தெளிவு பரீட்சிக்கப்படும்.*

(iv) *அரச நிதி முகாமை (காலம் : 2 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்*

*வருடாந்த மதிப்பீடுகளையும் கணக்கீடுகளையும் சமர்ப்பிக்கும் ஒருவரின் பொறுப்புக்கள், நிதிக் கட்டுப்பாடு, நிதிப் பொறுப்புக்களை ஒப்படைத்தல், நிதியினைப் பொறுப்பேற்றல், கணக்குப்பதிவும் மீளப்பெறுதலும், செலுத்தல்கள், அரச நிதிப் பொறுப்பு, முற்பணம் மற்றும் வங்கிக் கணக்குகள், வழங்கல்களும் சேவைகளும், பெறுகைச் செயற்பாடுகள், பொருட்தொகை மதிப்பீடு, கணக்காய்வு விசாரணைகள், அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் பேரேடுகள், வருமான செலவுச் சுருக்கம், வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டுப் புத்தகங்கள், அரச நிதிப் பயன்பாடு தொடர்பில் இதுவரை வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பான பொதுவான அறிவு பரீட்சிக்கப்படும்.*

(v) *பொது வினாத்தாள் (காலம் : 1 1/ 2 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்*

*அரசாங்க நிர்வாகத்தின் இயல்புகள், அரசாங்க நிர்வாகத்தின் கட்டமைப்பு, அரசாங்கத்தின் கொள்கைகளும் புதிய அரச மறுசீரமைப்பு, அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள், மனித உரிமைகள் ஆணைக்குழு, குறைகேள் அதிகாரி (ஓம்புட்ஸ்மன்), பாராளுமன்ற பொதுமக்கள் முறைப்பாட்டுச் செயற்குழு, அலுவலக*

கலாசாரம், தொழில்சார் ஒழுக்கங்களும் நல்லொழுக்கங்களும், அலுவலகத்திலுள்ள பௌதிக வளங்களைச் சிறந்த முறையில் வடிவமைத்தலும் ஊழியர் குழாத்தின் நலனோம்பல் செயற்பாடுகளும், பதவி அந்தஸ்து மற்றும் சிவில் அந்தஸ்து தொடர்பாக சமூக விஞ்ஞான ரீதியான அங்கீகாரம், சேவை பெறுநர்களுக்கு அரசாங்க அலுவலர்கள் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள்.

14. **நியமனத்திற்காக தெரிவுசெய்தல்** :

(i) இப்பரீட்சையில் சித்தியெய்தி நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைப்பதற்காக ஒவ்வொரு பாடத்திலும் 40 புள்ளிகள் என்ற விகிதத்தில் பெற்றுக்கொள்ளல் வேண்டும். பரீட்சையின்போது பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு ஏற்ப தயாரிக்கப்படும் திறமை ஒழுங்கிற்கு ஏற்ப விண்ணப்பதாரிகளின் தகைமைகளைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையின் முன்னிலைக்கு அழைக்கப்படுவார்கள். அந்நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தேர்ந்தெடுக்கப்படுகின்ற பரீட்சார்த்திகள் வெற்றிடங்கள் நிலவும், இத்தீவின் எப்பிரதேசத்திலேனும் அமைந்துள்ள அலுவலகம் ஒன்றில் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும். இணைப்புச் செய்யப்படும் அலுவலகத்தில் நியமனத்தை ஏற்க மறுத்தால் அவரின் நியமனத்தை இரத்துச்செய்து அடுத்ததாக தகைமையுடையவர்களை ஒழுங்கு வரிசையாக அழைத்து வெற்றிடங்கள் நிரப்பப்படும் ;

(ii) முதல் நியமனம் கிடைக்கப்பெற்ற நிலையத்தில் குறைந்தபட்சம் 3 வருடம் கட்டாய சேவையில் ஈடுபடுதல் வேண்டும். எவ்வாறு இருந்தபோதிலும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதாவது விசேட காரணத்தினால் அக்காலம் முடிவடைவதற்கு முன்னர் எவரேனும் ஒரு அலுவலரை இடமாற்றம் செய்வதற்கு அவசியப்படுமாயின், நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் உண்டு ;

(iii) எழுத்துப் பரீட்சையின் மூலம் தகைமையினைப் பெற்றுக்கொள்பவர்களின் பெயர்களை உள்ளடக்கிய பெறுபேற்று அட்டவணை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அறிவித்தலுக்கு ஏற்ப, "செயலாளர், அரசாங்க சேவைகள் ஆணைக்குழு"வினால் பெற்றுக்கொடுக்கப்படும். ஏனைய பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடுதல் அல்லது தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

15. அரச சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் 1840/34 ஆம் இலக்க 2013, திசெம்பர் 11 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரச முகாமை உதவியாளர் சேவைப்பிரமாணக் குறிப்பில் விதித்துரைக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பின் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டதும் ஏதேனும் திருத்தத்திற்கும் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள ஏதேனும் திருத்தத்திற்கும் அமைய நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

16. குறிப்பிட்ட வெற்றிட எண்ணிக்கையை அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கும், இவ் ஒழுங்குவிதிகள் மூலம் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பாக ஏதேனும் தீர்மானம் எடுப்பதற்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

17. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2017, செத்தெம்பர் 15.

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விசேட தரத்துக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017**

Limited Competitive Examination for Promotion to Supra Grade of Public Management Assistants Service - 2017

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

விண்ணப்பம் கோரும் அறிவித்தலுக்கு ஏற்ப விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உத்தேசிக்கும் நகரம் மற்றும் நகர இலக்கம்

நகரத்தின் பெயர் நகர இலக்கம்

1. தாங்கள் உள்ளடக்கப்படுவது இணைந்த சேவையிலா, அவ்வாறில்லாதுவிடின் எந்த மாகாண அரச சேவையினுள் உள்ளடங்குவது என்று :

(தாங்கள் உட்படும் அரசாங்க சேவைக்கு உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்.)

(மேல் மாகாண அரச சேவை - 01, மத்திய மாகாண அரச சேவை - 02, தென் மாகாண அரச சேவை - 03, வட மாகாண அரச சேவை - 04, கிழக்கு மாகாண அரச சேவை - 05, வடமேல் மாகாண அரச சேவை - 06, வடமத்திய மாகாண அரச சேவை - 07, ஊவா மாகாண அரச சேவை - 08, சப்ரகமுவ மாகாண அரச சேவை - 09, இணைந்த சேவைகள் - 10)

2. 2.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உ-ம் : SILVA, A.B.C.D.
2.2 முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) :----.
2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.4 தேசிய அடையாள அட்டை இல. :

3. 3.1 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்.)
3.2 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
3.3 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3.4 தொலைபேசி இலக்கம் :

4. பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

5. பால் :
பெண் - 1, ஆண் - 0
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

6. விவாக நிலை :
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் உள்ளவாறு வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

8. இப்பரீட்சை 1980, 1982, 1983, 1984, 1985, 1986, 1987, 1988, 1989, 1991, 1996, 1999 மற்றும் 2001 ஆகிய ஆண்டுகளில் நடாத்தப்பட்ட பொது எழுதுநர் சேவையின்/ 1985, 1999 ஆகிய ஆண்டுகளில் நடாத்தப்பட்ட அரச தட்டெழுத்தாளர் சேவையின்/ 1996 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட அரச சுருக்கெழுத்தாளர் சேவையின்/ 1999 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அரச கணக்குப் பதியுநர் சேவையின்/ 1999 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட அரச சிறாப்பர் சேவையின் மற்றும் 2006, 2007, 2011, 2015 ஆம் ஆண்டுகளில் நடாத்திய அரச முகாமை உதவியாளர் சேவையின் விசேட தரத்துக்கு தரமுயர்த்தும் மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சையில் நீர் தோற்றியுள்ளீரா ? :----.

9. (i) அரச முகாமை உதவியாளர் சேவைக்கு/ பொது எழுதுநர் சேவைக்கு/ அரச தட்டெழுத்தாளர் சேவைக்கு/ அரச சுருக்கெழுத்தாளர் சேவைக்கு/ அரச கணக்குப் பதியுநர் சேவைக்கு/ அரச சிறாப்பர் சேவைக்கு/ அரச பண்டகசாலைக் காப்பாளர் சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :----.

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் உள்ளவாறு மொத்தச் சேவைக்காலம் :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் உடன் முந்திய 5 வருட சேவைக்காலப்பகுதிக்குள் பெற்றுள்ள சம்பளமற்ற விடுமுறை நாட்கள் :----.

(iv) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் உள்ளவாறான முனைப்பான சேவைக் காலம் :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

(v) அரச முகாமை உதவியாளர் சேவையில்/ பொது எழுதுநர் சேவையில்/ அரச தட்டெழுத்தாளர் சேவையில்/ அரச சுருக்கெழுத்தாளர் சேவையில்/ அரச கணக்குப் பதியுநர் சேவையில்/ அரச சிறாப்பர் சேவையில்/ அரச பண்டகசாலைக் காப்பாளர் சேவையில் நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :----.

(vi) தற்போதைய தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் :----.

(vii) நீங்கள் பட்டதாரி ஆயின் பட்டம் பெற்ற ஆண்டும் பல்கலைக்கழகத்தின் பெயரும் :----.

(viii) பட்டம் செயல்வலுப் பெறும் திகதி :----.

10. (i) அரச முகாமை உதவியாளர் சேவைக்கு/ பொது எழுதுநர் சேவைக்கு/ அரச தட்டெழுத்தாளர் சேவைக்கு/ அரச சுருக்கெழுத்தாளர் சேவைக்கு/ அரச கணக்குப் பதியுநர் சேவைக்கு/ அரச சிறாப்பர் சேவைக்கு/ அரச பண்டகசாலைக் காப்பாளர் சேவைக்கு சேர்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி :----.

(ii) போட்டிப் பரீட்சை இன்றி நீங்கள் பொது எழுதுநர் சேவைக்கு/ அரச தட்டெழுத்தாளர் சேவைக்கு/ அரச சுருக்கெழுத்தாளர் சேவைக்கு/ அரச கணக்குப் பதியுநர் சேவைக்கு/ அரச சிறாப்பர் சேவைக்கு/ அரச பண்டகசாலைக் காப்பாளர் சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பின் குறித்த சேவைக்குச் சேர்வதற்காக நீங்கள் தகைமையடைந்த மொழி :----.

11. தங்களது பிரத்தியேகக் கோவையினை பேணிச்செல்லும் அலுவலகம் மற்றும் நிறுவனத் தலைவர் உட்பட முகவரியினைத் தெளிவாகக் குறிப்பிடவும் :----.

12. பணம் செலுத்திய பற்றுச்சீட்டினை கழறாதவாறு ஒட்டவும் :

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டைக் கழராதவாறு இங்கு ஒட்டவும்.<br>பற்றுச்சீட்டின் பிரதியொன்றை உடன் வைத்திருத்தல் பிரயோசனப்படலாம். |

13. பரீட்சார்த்தியின் உறுதியுரை :

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய அளவில்,

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு உடன்முன்னரான 5 வருட காலத்திற்குள் கிடைக்கவேண்டிய சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளதுடன், (திணைக்கள சேவைப் பரீட்சைகளில் சித்தியடையும் நிபந்தனையான சம்பள ஏற்றங்கள் தவிர்ந்த) அக்காலப்பகுதிக்குள் எவ்விதத்திலான ஒழுக்காற்றுத் தண்டனை எதற்கும் ஆளாகவில்லை எனவும்,

இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்குத் தகைமையுள்ளது என்றும் இவ்விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும், நான் ................. தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுவதால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும்/ பரீட்சைக் கட்டணம் செலுத்திய .................................... ஆம் இலக்க ................................. ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளதென்றும்*, இப்பரீட்சை பற்றிய பிரமாணத்தின்படி நான் தகைமையற்றவர் எனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்நிலையிலும் எனது பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எத்தகையதுமான எத்தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன் என்றும் இத்தால் உறுதியுரைக்கின்றேன். மேலும், பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்படுவதற்கும் நான் இணங்குகின்றேன்.

----,
அலுவலரின் கையொப்பம்.

திகதி :----.

14. திணைக்களத் தலைவரின் சான்றுரை :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி* ...................................................... எனும் விண்ணப்பதாரர் ................................................................ ஆந் திகதி முதல் இவ் அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் என்றும், ....... ........................................................ ஆந் திகதியன்று உள்ளவாறு ஐந்து வருட திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும், இவ்விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் இவ் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுடன் என்னால் தனிப்பட்ட முறையில் பரிசீலிக்கப்பட்டதென்றும் அவை சரியானவை என்றும், இவர் முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றுவதால் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விலக்களிப்பதற்கு தகுதியுடையவரென்றும்/ குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும்*, விண்ணப்பதாரர் உரிய வர்த்தமானி அறிவித்தலின்படி பரீட்சைக்குரிய தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்றும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 13 ஆம் இலக்க 1972.10.02 ஆந் திகதிய சுற்றறிக்கை கடிதப்படி அலுவலரின் வரலாற்றுத் தாளில் அதுபற்றி குறிக்கப்பட்டதென்றும் 2017 ................................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உள்ளீர்ப்புக் கடிதம்/ நியமனக் கடிதத்தின் இலக்கமும் கடிதத்தின் திகதியும் முறையே ................................................. மற்றும் ................................ ................... ஆகும்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்.)
திகதி :----.
*தேவையற்ற சொற்களை வெட்டிவிடுக.

9-881

## இலங்கை திட்டமிடல் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017

இவ் அறிவித்தலில் "சேவை" எனும் பதம் இலங்கை திட்டமிடல் சேவையை (இ.தி.சே.) குறிக்கும் பதமாகும்.

1. **பரீட்சை நடைபெறும் திகதி.**- பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2018, சனவரி மாதம் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் இப் பரீட்சை நடாத்தப்படும். இப் பரீட்சையை காலந்தாழ்த்தவோ அல்லது இரத்துச் செய்வதற்கோ அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரமுண்டு.

2. நியமிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய தீர்மானிக்கப்படும்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்.**- அரசாங்க சேவை நியமனங்களை கட்டுப்படுத்துகின்ற பொது நிபந்தனைகளுக்கும், இல. 1670/32 மற்றும் 2010, செத்தெம்பர் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை திட்டமிடல் சேவைப் பிரமாணக் குறிப்பில் பிரசுரிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அதில் மேற்கொண்டுள்ள அல்லது இதன் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் கீழ்ப்பட்டு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி ஒருவர் இலங்கை திட்டமிடல் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர். தங்களுக்கு உரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால்தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படல் வேண்டும்.

4. **கட்டமைப்பு மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.**- 2016.01.01 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 இன் எஸ்.எல். 1 - 2016 சம்பள வகுதிக்கமைய,

**மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.**- SL 1-2016 - ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895.

(2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.03/2016 இன் ஏற்பாடுகளுக்கு அமைய அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பளம் வழங்கப்படும்.)

5. **தகைமைகள் :**

5.1 ***திறந்த போட்டிப் பரீட்சை :***

(அ) *கல்வித் தகைமைகள் :*

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொண்ட 1 ஆம் அல்லது 2 ஆம் வகுப்புடனான இரசாயனவியல் பீ.எஸ்சி. (விசேட) பட்டம்

அல்லது

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொண்ட பட்டம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பாராளுமன்ற சட்டமொன்றின் மூலம் தாபிக்கப்பட்ட பயிற்சி நிறுவனம் ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட ஓராண்டுக்குக் குறையாத ஆகக் குறைந்த பாடநெறிக் காலஎல்லையைக் கொண்டுள்ள பட்டப்பின் டிப்ளோமா ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) *தேகாரோக்கியம்.*- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை செய்வதற்கும் இப்பதவிக்கான கடமைகளை மேற்கொள்ளவும் உள மற்றும் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(இ) *ஏனைய தகைமைகள் :*

(i) விண்ணப்பதாரிகள் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) எந்தவொரு விண்ணப்பதாரியும் இரண்டு முறைக்கு மேல் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(iv) ஏதேனும் ஒரு சமயப்பிரிவின் துறவியாக இருக்கும் ஒருவர் இப் பரீசைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறமாட்டார்.

(v) சேவைக்கு நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத்தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்வதற்கு, விண்ணப்பதாரர் 5.1 (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை 2017, செத்தெம்பர் 29 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியன்று) எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஈ) *வயதெல்லை.-* 2017, செப்தெம்பர் 29 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியன்று) 22 வயதிற்குக் குறையாதவராகவும், 28 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(உ) *எழுத்துமூலப் பரீட்சை* (1 ஆவது பின்னிணைப்பைப் பார்க்கவும்) :

| பாடங்கள் | உச்சப் புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடைவதற்கான புள்ளிகளின் எண்ணிக்கை (ஆக குறைந்தது) |
|---|---|---|
| கிரகித்தல் | 100 | 40 |
| நுண்ணறிவு | 100 | 40 |
| பொது அறிவு | 100 | 40 |

5.2 ***மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை :***

(அ) *கல்வித் தகைமைகள்.-* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெற்றுக் கொண்ட பட்டம்.

(ஆ) *அனுபவம்.-* தமது பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள, விண்ணப்பம் கோரும் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் MN -1 -2016(A) சம்பள அளவுத் திட்டத்தில் அல்லது அதிலும் கூடிய சம்பள அளவுத்திட்டத்திற்குரிய பதவி ஒன்றில் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாத, தொடர்ச்சியான, நிரந்தர மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அவ்வாறே இல. 09/ 0967/ 306/ 061 ஐக் கொண்ட அமைச்சரவைப் பத்திரம் தொடர்பாக 2009.06.10 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்திற்கமைய இலங்கை திட்டமிடல் சேவையின் வகுப்பு II இன் தரம் II இற்கு மிகையூழியர் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள, தற்போது இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III இற்கு உள்ளீர்க்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடியும்.

(இ) *தேகாரோக்கியம்.-* அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்குத் தேவையான தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) *பிற தகைமைகள் :*

(i) விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பிப்பதற்கு உடன்முன்னரான ஐந்து ஆண்டு காலத்தினுள் உரிய தினத்தன்று அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) 2017, செப்தெம்பர் 29 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியன்று) உடன்முன்னரான ஐந்து ஆண்டு காலத்தினுள் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு இரண்டு தடவைகளுக்கு மேல் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(v) ஏதேனும் ஒரு சமயப்பிரிவின் துறவியாக இருக்கும் ஒருவர் இப் பரீசைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறமாட்டார்.

(vi) சேவைக்கு நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக் கொள்வதற்கு, விண்ணப்பதாரர் 5.2 (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை 2017, செத்தெம்பர் 29 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியன்று) எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(உ) ***ஆட்சேர்ப்பு நடைமுறை.***- எழுத்துமூலப் பரீட்சை (2 ஆவது பின்னிணைப்பைப் பார்க்கவும்)

| *பரீட்சித்துப் பார்த்து புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள்* | *உச்சப் புள்ளிகளின் எண்ணிக்கை* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|
| கிரகித்தல் | 100 | 40 |
| விடய அறிவு | 100 | 40 |
| திட்டமிடல் | 100 | 40 |

6. **பரீட்சைக் கட்டணம்.**- திறந்த போட்டிப் பரீட்சைக் கட்டணம் ரூபா 1000 ஆவதுடன் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான கட்டணமும் கூட ரூபா 1,000 ஆகும். விண்ணப்பதாரர் ஒருவர் இரண்டு பரீட்சைகளுக்கும் விண்ணப்பிக்கும் பட்சத்தில் கட்டணமாக ரூபா 1,500 மாத்திரமே அறவிடப்படும். இக் கட்டணத்தை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பாகிய 2003-02-13 இற்கு வைப்புச் செய்வதற்காக பிரதேச செயலகத்திற்குச் செலுத்துதல் வேண்டும். பிரதேச செயலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டினை விண்ணப்பப் படிவத்திலுள்ள உரிய கூட்டினுள் கழறாத விதத்தில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும். இப் பரீட்சைக் கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளளிக்கப்பட மாட்டாது

7. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பம் இந்த அறிவித்தலுடன் இணைத்துள்ள மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி, A 4 அளவிலான கடதாசியில் தயாரித்து விண்ணப்பதாரரினாலேயே நிரப்பப்படுதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப் படிவம் இலக்கம் 01 இலிருந்து 03 வரையான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும், இலக்கம் 04 இலிருந்து 07 வரையான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் மீதி மூன்றாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். குறித்த மாதிரிப்படிவத்தை ஒத்திராத மற்றும் சரியாக பூர்த்தி செய்யப்படாத முழுமையற்ற விண்ணப்பங்களும் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். சரியான முறையில் விண்ணப்பங்களை பூர்த்தி செய்யாமை காரணமாக ஏற்படும் இழப்புக்களை விண்ணப்பதாரரே ஏற்றுக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பத்தின் நிழற்பிரதி ஒன்றை தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

**குறிப்பு**.- "விண்ணப்பப்படிவம் மற்றும் அனுமதி அட்டை இரண்டிலும் பரீட்சார்த்தியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். குறித்த நிறுவனம் ஒன்றுக்கூடாக விண்ணப்பிக்கும் பரீட்சார்த்தி ஒருவரின் கையொப்பமானது நிறுவனத் தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறல்லாத ஏனைய சகல பரீட்சார்த்திகளினதும் கையொப்பமானது அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர்/ பிரிவின் கிராம சேவையாளர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரம்பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் செய்யப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஓர் அலுவலர் அல்லது ரூபா 2,40,360 இற்கும் கூடுதலான வருடாந்த திரட்டிய சம்பளத்தினைப் பெற்றுக்கொள்ளும் அரச அல்லது மாகாண அரச சேவையிலுள்ள பதவிநிலை அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்."

(இ) இப்பரீட்சைக்காகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவமானது 2017, ஒற்றோபர் 27 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, பரீட்சைகள் திணைக்களம், த.பெ. இல. 1503, பெலவத்த, பத்தரமுல்ல" என்னும் முகவரியினை அடையக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும். "திறந்த போட்டிப் பரீட்சை, திட்டமிடல்சேவையின் தரம் III" எனத் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**குறிப்பு**.- அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிகின்ற, திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்கள்/ நிறுவகத் தலைவர்கள் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

(ஈ) மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கான விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களின் ஊடாக 2017, ஒற்றோபர் 27 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, பெலவத்த, பத்தரமுல்ல" என்னும் முகவரியினை அடையக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும். "மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, திட்டமிடல் சேவையின் தரம் III" எனத் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த போட்டிப் பரீட்சைகள் ஆகிய இரண்டிற்கும் தோற்றுவதாக இருப்பின், கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த போட்டிப் பரீட்சை, திட்டமிடல் சேவையின் தரம் III" எனத் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும்.

(உ) அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட்டவுடன் பரீட்சைத் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் அறிவித்தல் ஒன்று பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் குறிக்கப்பட்ட பரீட்சைத் திகதிக்கு முன்னர் குறைந்தது ஐந்து நாட்களுக்குள் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவித்தலில் குறிக்கப்பட்ட விதத்தில் பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளைக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கும் வேளையில், பரீட்சையின் பெயர், பரீட்சார்த்தியின் முழுப்பெயர், அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பனவற்றை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராக இருக்கும் பட்சத்தில், அவ் விபரங்களுடன் அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்பட வேண்டிய தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு கோரிக்கைக் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட வேண்டும். பரீட்சைகள் திணைக்களத்திற்கு அழைப்பினை மேற்கொள்ளும் போது, விண்ணப்பப் படிவத்தின் நிழற் பிரதி, செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணத்தின் பற்றுச்சீட்டு, விண்ணப்பத்தை பதிவுத் தபாலிலிட்ட பற்றுச்சீட்டு ஆகியனவற்றை கைவசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

8. **பரீட்சைக்கான அனுமதி** :

(அ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் எடுகோளின் அடிப்படையில் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்பிவைப்பார். பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரி, கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள தமது அனுமதி அட்டையினை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். தமது அனுமதி அட்டைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(ஆ) பரீட்சார்த்திகள் உரிய திகதியில் உரிய நேரத்திலோ அல்லது அதற்கு முன்னரோ பரீட்சை மண்டபத்திற்கு வருகை தருவதை கருத்திற்கொள்ள வேண்டும். அத்துடன் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அனுமதி அட்டையினை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் அவதானிக்கக்கூடிய விதிகள் அடங்கிய தொகுப்பு ஒன்று வர்த்தமானியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(இ) பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்றினை வழங்குவதைக் கொண்டு வெற்றிடப் பதவிக்கு/ விண்ணப்பித்த பதவிகளுக்கு தகைமையினைக் கொண்டுள்ளார் என்று ஒருபோதும் கருதப்பட முடியாது.

(ஈ) பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்பட்டுள்ளனர். மேலும், அவர்கள் இவ்விதிமுறைகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் ஆளாகவேண்டி ஏற்படும்.

9. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்தி ஒருவர் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வண்ணம் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தினை நிரூபிக்குமாறு கோரப்படுவார். இந்நோக்கத்திற்காக, பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

10. **பிழையான தகவல்களை வழங்குதல்**.- பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்றவர் எனத் தெரியவரின் அவரின் பரீட்சார்த்தித் தன்மையானது பரீட்சைக்கு முன்னரோ, அக் காலப்பகுதியிலோ அல்லது அதன் பின்னரோ எந்தவொரு கட்டத்திலும் இரத்துச் செய்யப்படுவதற்கு ஏதுவாகலாம். பரீட்சார்த்தி ஒருவர் சமர்ப்பித்துள்ள தகவல்கள் பிழையானவை எனத் தெரிந்துகொண்டு அவற்றை அளித்திருப்பின் அல்லது அவர் வேண்டுமென்றே ஏதேனும் முக்கிய விடயத்தினை மூடிமறைத்திருப்பின் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவார்.

11. இவ் ஒழுங்குவிதிகளில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயமானது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தின் படி கையாளப்படும்.

12. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சை மொழி மூலம் :

(அ) இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.
(ஆ) விண்ணப்பதாரிகள் தாம் ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

**குறிப்பு** :

(i) பரீட்சார்த்திகள் பரீட்சையில் சகல வினாக்களுக்கும் ஒரு மொழியிலேயே விடையளித்தல் வேண்டும்.
(ii) பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மொழிமூலத்தை எக்காரணம் கொண்டும் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

13. **பரீட்சித்தல் முறை** :

13.1 ***திறந்த போட்டிப் பரீட்சை***.- பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய எழுத்துமூலப் பரீட்சை :

| | | | |
|---|---|---|---|
| (i) கிரகித்தல் | - | காலம் 02 மணித்தியாலம் | -100 புள்ளிகள் |
| (ii) நுண்ணறிவு | - | காலம் 01 மணித்தியாலம் | -100 புள்ளிகள் |
| (iii) பொது அறிவு | - | காலம் 03 மணித்தியாலம் | -100 புள்ளிகள் |

13.2 ***மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை*** :

| | | | |
|---|---|---|---|
| (i) கிரகித்தல் | - | காலம் 02 மணித்தியாலம் | -100 புள்ளிகள் |
| (ii) விடயஅறிவு | - | காலம் 01 மணித்தியாலம் | -100 புள்ளிகள் |
| (iii) திட்டமிடல் | - | காலம் 02 மணித்தியாலம் | -100 புள்ளிகள் |

பாடத்திட்டம் இவ் அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்படுள்ளது.

13.3 ***நேர்முகப் பரீட்சை***.- எழுத்துமூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்துக்கும் ஆகக் குறைந்தது 40% வீத புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை, எழுத்துமூலப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் திறமை முன்னுரிமை ஒழுங்குமுறையின் அடிப்படையில் மற்றும் குறித்த வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

13.4 ***பெறுபேறுகளை வெளியிடல்***.- வர்த்தமானி அறிவித்தலின் 13.1, 13.2 மற்றும் 13.3 பந்திகளுக்கு அமைய பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறும் பரீட்சார்த்திகளின் ஒவ்வொரு பாடத்துக்கும்

பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமை முன்னுரிமை ஒழுங்கிற்கமைய தயாரிக்கப்பட்ட பெறுபேறு அட்டவணை செயலாளர், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றியுள்ள சகல விண்ணப்பதாரிகளினதும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியில் அறியத் தரப்படும் அல்லது பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளம் www.results.exams.gov.lk இல் பிரசுரிக்கப்படும்.

14. **நியமிப்பதற்கான தேர்ந்தெடுக்கும் முறை.**- திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைகளுக்கு, எழுத்துமூல பரீட்சைகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள திறமை முன்னுரிமை ஒழுங்கின் அடிப்படையில் மற்றும் அடிப்படை தகைமைகளைப் பெற்றுள்ளவர்கள் தெரிவு செய்யப்படுவர். பல பரீட்சார்த்திகள் ஒரே சமமான புள்ளிகளைப் பெற்றிருப்பின் தேர்ந்தெடுப்பதற்கான இறுதித் தீர்மானமெடுக்கும் அதிகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கேயுண்டு.

15. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள இவ்வறிவித்தலில் மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்,
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

2017, செத்தெம்பர் 14.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை திட்டமிடல் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த /மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017**

OPEN/LIMITED COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO GRADE III OF THE SRI LANKA PLANNING SERVICE – 2017

| | |
|---|---|
| பரீட்சையின் பெயர் :<br>(அலுவலக உபயோகத்திற்காக) | |
| பரீட்சைக்குத் தோற்றும் நகரம் | அந்நகரத்தின் இலக்கம் |
| | |
| விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற நகரம் மற்றும் நகர இலக்கத்தைக் குறிப்பிடுக.<br>(கொழும்பு- 1, யாழ்ப்பாணம் - 2) * நகரம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. | |
| பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழிமூலம் :<br>சிங்களம் - 2 , தமிழ் - 3, ஆங்கிலம் - 4<br>(உரிய இலக்கத்தை கூட்டில் எழுதவும்) * மொழிமூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. | ☐ |
| நீர் விண்ணப்பிப்பது திறந்த /மட்டுப்படுத்தப்பட்ட அல்லது இரண்டு பரீட்சைக்குமா என்பது பற்றி, மட்டுப்படுத்தப்பட்ட - 1, திறந்த - 2, இரண்டிற்கும் - 3 (குறித்த இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)<br>* விண்ணப்பிக்கின்ற பரீட்சை பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. | ☐ |

1. 1.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் பின்னே வருமாறு (பெயர் ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா. : GUNAWARDHANA, H.M.S.K)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.2 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.3 அலுவலக முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.4 நுழைவுச்சீட்டு அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(அரசாங்க சேவை/ மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் அவர்களது அலுவலக முகவரியை எழுதுதல் வேண்டும். முகவரியில் ஏதேனும் மாற்றம் ஏற்படும் பட்சத்தில், அதனை உடனடியாக அறிவித்தல் வேண்டும்.)

3. 3.1 தேசிய ஆள் அடையாள அட்டை இல.: | | | | | | | | | | |

3.2 பால் நிலை : ஆண் - 1, பெண்- 0 | |

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.3 சிவில் அந்தஸ்து :

விவாகமானவர் - 1, விவாகமாகாதவர் - 2 | |

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.4 பிறந்த திகதி :

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

3.5 2017.09.29 இல் வயது :

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

4. (திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரியினால் நிரப்பும் பொருட்டு) பின்வரும் தகவல்களை வழங்குக :

4.1 அறிவித்தலின் 5.1 பந்தியின் கீழ் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறுவதாக இருப்பின் அதற்கான தகைமைகள் :----.

4.2 அதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனம் :----.

5. (மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரியினால் நிரப்பும் பொருட்டு) பின்வரும் தகவல்களை வழங்குக.

5.1 அறிவித்தலின் 5.2 பந்தியின் கீழ் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறுவதாக இருப்பின் அதற்கான தகைமைகள் :----.

5.2 அதற்கான தகைமைகளைப் பெற்றுக் கொண்ட நிறுவனம் :

(அ)

| சேவையாற்றிய திணைக்களம் | பதவி | இருந்து | வரை | கால எல்லை |
|---|---|---|---|---|
| | | | | |

(ஆ) (i) சேவை/ பதவி : ....................................................................

(ii) வகுப்பு : ........................................... ஆந் திகதியில் இருந்து

(iii) வகுப்பு : ........................................... ஆந் திகதியில் இருந்து

(iv) 2017.09.29 ஆந் திகதியளவில் (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியளவில்) அரசாங்கத்தின் கீழ் முழுமையான சேவைக் காலம் :

வருடங்கள் : ....................................... மாதங்கள் : ..................................

(அ) மேற்படி (ii) இல் சேவை : வருடங்கள் : ........................ மாதங்கள் : .....................

(ஆ) மேற்படி (iii) இல் சேவை : வருடங்கள் : ........................ மாதங்கள் : .....................

(v) 2017.09.29 ஆந் திகதியளவில் (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியில்) ஆண்டிற்கான சம்பளம் :----.

6. 6.1 இலங்கை திட்டமிடல் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றிய ஆண்டு :

1. ...................... 4. ........................
2. ...................... 5. ........................
3. ...................... 6. ........................

6.2 இலங்கை திட்டமிடல் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்றிய ஆண்டு:

1. ...................... 4. ........................
2. ...................... 5. ........................
3. ...................... 6. ........................

7. பற்றுச்சீட்டினை கழறாதவாறு விண்ணப்பத்தில் நன்கு ஒட்டவும்.

| பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும். |
|---|

(i) பற்றுச்சீட்டின் இலக்கம் :................................. (iii) பணம் செலுத்திய இடம் : ..............................
(ii) பணம் செலுத்திய திகதி :................................ (iv) செலுத்திய தொகை : ரூபா ...................

8. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

8.1 இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கெட்டிய விதத்திலும் நம்பிக்கையின் பிரகாரமும் உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இல. ........................ மற்றும் ....................... ஆந் திகதிய பற்றுச்சீட்டினை இத்துடன் இணைத்துள்ளேன் எனவும் உறுதியுரைக்கின்றேன். மேலும், பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு அமைய செயற்படுவதற்கும், இப்பரீட்சை தொடர்பான நிபந்தனைகளுக்கு அமைய நான் தகுதியற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும்போதோ அல்லது அதன் பின்னரோ எனது பரீட்சார்த்த நிலையை இரத்துச் செய்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன்.

8.2 2017, செத்தெம்பர் 29 ஆந் திகதியளவில் (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியளவில்) உடன்முன்னரான ஐந்து ஆண்டு காலத்தினுள் (சேவை அல்லது திணைக்கள ரீதியான பரீட்சையில் சித்தியடைவதை நிபந்தனையாகக் கொண்ட வேதனாதிகள் தவிர) அனைத்து வேதனாதிகளையும் நான் ஈட்டியுள்ளேன் எனவும், (எச்சரிக்கை தவிர) எந்தவித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் நான் உட்படவில்லை எனவும் உறுதியுரைக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

9. 9.1 கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .................................................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் அவர் எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................................
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்
கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

பெயர் : ............................................................
பதவிப் பெயர் : ............................................................
முகவரி : ............................................................
திகதி : ............................................................

**குறிப்பு**.- உறுதிப்படுத்துபவர் சமாதான நீதவான், சத்தியப் பிரமாணம் பெற்ற ஆணையாளர், நொத்தாரிசு, வழக்கறிஞர் அல்லது ஆண்டொன்றுக்கு ரூபா 2,40,360 க்கு குறையாத திரட்டிய சம்பளம் பெறும் அரசாங்க அலுவலர் ஆகியவர்களில் ஒருவராக இருத்தல் வேண்டும்.)

9.2 திணைக்களத் தலைவரின் சான்றிதழ்.- (மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல விண்ணப்பதாரிகளினாலும் மற்றும் தேவையேற்படின் மாத்திரம் திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளினால் நிரப்பப்படுதல் வேண்டும்.) தமது பிரத்தியேக கோவை பேணப்படுகின்ற அலுவலகத்தின் தலைவர், திணைக்களத் தலைவராக கையொப்பமிடல் வேண்டும்.

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .................................................. என்பவர் ............................ ஆந் திகதியில் இருந்து இவ் அலுவலகத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், அவரது பணி மற்றும் நடத்தை திருப்பதிகரமானதெனவும், மேற்படி 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும் இவ் அலுவலகத்தில் உள்ள அறிக்கைகளின் வாயிலாக நான் தனிப்பட்ட முறையில் பரீசித்தேன் எனவும், அவை சரியானவை எனவும், 2017 ................ மாதம் .......... ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதியுரைக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :............................................................
பதவிப் பெயர் :............................................................
திகதி :............................................................
(உத்தியோகபூர்வ முத்திரையுடன்)

**1 ஆம் பின்னிணைப்பு**

இலங்கை திட்டமிடல் சேவையின் III ஆந் தரத்திற்கு நியமிப்பதற்காக நடாத்தப்படும் திறந்த அடிப்படையிலான பரீட்சையின் பாட விதானம் தொடர்பான விபரம் :

இப்பரீட்சையானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள வினாத்தாள்களை உள்ளடக்கியதாகும்.

| இல. | பாடங்கள் | உச்சப் புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடைவதற்கான புள்ளிகளின் எண்ணிக்கை | காலம் |
|---|---|---|---|---|
| 1 | கிரகித்தல் | 100 | 40 | 02 மணித்தியாலம் |
| 2 | நுண்ணறிவு | 100 | 40 | 01 மணித்தியாலம் |
| 3 | பொது அறிவு | 100 | 40 | 03 மணித்தியாலம் |

**பாட விதானம் :**

**பாட இலக்கம் 01** - *கிரகித்தல்.-* இவ்வினாத்தாள் இரு பகுதிகளைக் கொண்டதாகும். ஒவ்வொரு பகுதிக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

***I ஆம் பகுதி*** - இப் பகுதியில் கட்டுரை ஒன்றும் சுருக்கம் ஒன்றும் எழுதுவது உள்ளடக்கப்பட்டுள்ளது.

***II ஆம் பகுதி*** - விண்ணப்பதாரியின் மொழியாற்றலை பரீட்சிக்கும் பொருட்டு தயாரிக்கப்பட்ட பல சொற்றொடர்கள் இரண்டாம் பகுதியில் தரப்பட்டுள்ளன. இச் சொற்றொடர்களின் துணையுடன் கீழ்க் கோடிடப்பட்டுள்ள சொற்களின் பொருளை தனி வாக்கியத்தில் குறிப்பிடும்படி அல்லது அது தொடர்பாக விவரக் குறிப்பு எழுதும்படி அல்லது மாற்றீடாக மிகவும் உசிதமான கூற்றைத் தெரிவு செய்யும்படி அல்லது வழங்கப்பட்டுள்ள வினாவுக்கான பல பதில்களில் சரியான பதிலைத் தெரிவு செய்யும்படி பரீட்சார்த்திகள் வேண்டப்படுவர். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.

**பாட இலக்கம் 02** - *நுண்ணறிவு.-* பரீட்சார்த்தியின் தர்க்கரீதியான ஆற்றல் மற்றும் பகுப்பாய்வுத் திறன், சரியான நிகழ்வு அனுமானிக்கும் திறன் ஆகியவற்றை அளவீடு செய்யும் நோக்கில் இவ் வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது. இது 50 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளதுடன், அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.

**பாட இலக்கம் 03** - *பொது அறிவு.-* இலங்கையின் பூகோள, அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார, சுற்றாடல் உள்ளடங்கலாக இலங்கையின் முழுமொத்த சுற்றாடல் தொடர்பாகவும், தேசிய உள்ளக ரீதியாக

முக்கியமானதும், காலத்திற்கேற்றவாறான நிலைமைகள் மாத்திரமன்றி விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சி தொடர்பாகவும் பரீட்சார்த்தியிடமுள்ள பொது அறிவினை ஆராய்வதற்கான வினாக்களை இவ்வினாத்தாள் கொண்டுள்ளது. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.

**குறிப்பு :**

(i) பரீட்சார்த்திகள் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியிலேயே விடையளித்தல் வேண்டும்.

(ii) தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் எக்காரணம் கொண்டும் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(அ) இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுகின்றது.

(ஆ) பரீட்சார்த்திகள் தாம் விரும்புகின்ற ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முடியும்.

### 2 ஆம் பின்னிணைப்பு

இலங்கை திட்டமிடல் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிப்பதற்காக நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையின் பாடவிதானம் தொடர்பான விபரம் :

இப்பரீட்சையானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள வினாத்தாள்களை உள்ளடக்கியதாகும்.

| இல. | பாடங்கள் | உச்சப் புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடைவதற்கான புள்ளிகளின் எண்ணிக்கை | காலம் |
|---|---|---|---|---|
| 1 | கிரகித்தல் | 100 | 40 | 02 மணித்தியாலம் |
| 2 | விடய அறிவு | 100 | 40 | 01 மணித்தியாலம் |
| 3 | திட்டமிடல் | 100 | 40 | 02 மணித்தியாலம் |

பாடவிதானம் :

***பாட இலக்கம் 01*** - *கிரகித்தல்.*- சொற்றொடர் வகைகள் பரீட்சார்த்தியிடம் முன்வைக்கப்படும். அதில் சில சொற்றொடர்களின் துணையுடன் பரீட்சார்த்திக்கு மாற்றீட்டுக் கூற்று வகைகள் தரப்படும். அதில் ஒன்று அச் சொற்றொடரின் உள்ளடக்க விடயத்துடன் நன்றாக பொருந்தும். மிகவும் உசிதமான கூற்றைத் தெரிவு செய்யும்படி பரீட்சார்த்தி வேண்டப்படுவர். ஏனைய சொற்றொடர்களுக்குக் கிட்டியதாக வினாக்கள் தயாரிக்கப்படுவது பரீட்சார்த்தி அச் சொற்றொடர்களின் அர்த்தத்தை புரிந்து கொள்ளும் விதத்தை பரீட்சிப்பதற்காகவேயாகும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.

***பாட இலக்கம் 02*** - *விடய அறிவு.*- பரீட்சார்த்தியிடமுள்ள படைப்பாற்றல் மிகு சிந்தனைத் திறன் மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் திறன் ஆகியனவற்றை பரீட்சிக்கும் நோக்குடன் இவ்வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வினாத்தாளில் தற்போதைய இலங்கையின் பொருளாதார மற்றும் திட்டமிடல் சம்பந்தமான நூல்கள் மற்றும் பிரசுரங்கள் ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டு மேலெழுகின்ற பிரச்சினைக்குறியதான ஒரு சந்தர்ப்பம் அல்லது பல சந்தர்ப்பங்கள் பரீட்சார்த்தியிடம் முன்வைக்கப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளைத் தரும்படி வேண்டப்படுவர். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.

***பாட இலக்கம் 03*** - *திட்டமிடல்.*- இவ்வினாத்தாளின் நோக்கம், திட்டமிடல் கோட்பாடுகள் மற்றும் திட்டமிடல் மூலோபாயங்கள் தொடர்பாக பரீட்சார்த்தியின் அடிப்படை அறிவினை ஆராய்வதாகும்.

**குறிப்பு :**

(i) பரீட்சார்த்திகள் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியிலேயே விடையளித்தல் வேண்டும்.

(ii) தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் எக்காரணம் கொண்டும் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(iii) எல்லாப் பரீட்சார்த்திகளும் மூன்று (03) வினாத்தாள்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(iv) ஒரு தடவையில் ஆட்சேர்க்கப்படுகின்ற எண்ணிக்கை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினாலேயே தீர்மானிக்கப்படும்.

*9-854*

## கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு

அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம்

### அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர் சேவைப் பிரிவைச் சேர்ந்த அளவியல் ஆய்வு உத்தியோகத்தர் (திணைக்களம் சார்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017

அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்தைச் சேர்ந்த அளவியல் ஆய்வு உத்தியோகத்தர் (திணைக்களம்சார்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2018 சனவரி மாதம் நடத்தப்படவுள்ள போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை 2017, நவெம்பர் 09 ஆந் திகதி அல்லது அதற்கு முன் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அளவியல் விஞ்ஞானஆய்வு உத்தியோகத்தர் (திணைக்களம்சார்) பதவி என குறிப்பிடப்பட வேண்டும்.

01. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். விதவைகள்/ அநாதைகள் மற்றும் விதுரர்கள் /அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்பு நிதி செலுத்த வேண்டும்.

(ii) அரசகரும மொழியற்ற மொழி மூலமொன்றில் சேவையில் சேர்ந்த உத்தியோகத்தர்கள் நன்நடத்தை காலத்திற்குள் அரசகரும மொழி தகைமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன் பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 07/2017 மற்றும் அதற்கு நேரிடையான சுற்றறிக்கைக்கு அமைய உரிய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல்வேண்டும்.

02. **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் :**

பதவிக்கான மாதாந்த சம்பளஅளவுத்திட்டம் 3/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் MN 4-2016 ரூபா. 31,490-10 x 445-11 x 660-10 x 730-05 x 750 - ரூபா 54,250 ஆகும். குறித்த சம்பளம் 2020.01.01 ஆந் திகதி முதல் செலுத்தப்படும். அச்சுற்று நிருபத்தின் அட்டவனை II இன் ஏற்பாடுகளுக்கு அமைய நியமனம் வழங்கப்படும் திகதியிலிருந்து சம்பளம் செலுத்தப்படும்.

பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்து மூன்று (03) வருடங்கள் கழிவதற்கு முன் 1 ஆம் தடை தாண்டல் பரீட்சையிலும், II ஆம் தரத்திற்கு பதவி உயர்வு பெற்று மூன்று (03) வருடங்கள் கழிவதற்கு முன் 2 ஆம் தடை தாண்டல் பரீட்சையிலும், I ஆம் தரத்திற்கு பதவி உயர்வு பெற்று ஐந்து (05) வருடங்கள் கழிவதற்கு முன் 3 ஆம் தடை தாண்டல் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும்.

03. **கல்வித்தகைமைகள் :**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பௌதீகவியல் பாடத்தை குறைந்தது 2 வருடங்கள் கற்றுள்ள விஞ்ஞானத்துறை பட்டமொன்றைப் பெற்றிருக்க வேண்டும்.

04. **வேறு தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் ஆகும் போது வயது 21-35 இற்கு இடைப்பட்டவராக இருக்கவேண்டும். (அதற்கு அமைய 1996.09.25 ஆந் திகதி அல்லது அதற்கு முன் அல்லது 1982.09.25 ஆந் திகதி அல்லது அதற்குப்பின் பிறந்தவர்கள் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோர் ஆவர்.)
(iii) நல்லொழுக்கமும் நல்ல தேகாரோக்கியமும் கொண்டவராக இருக்க வேண்டும்.

05. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை:**

மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பெற்றுக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் பரீட்சை மற்றும் கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். எழுத்துமூலப் பரீட்சையானது பரீட்சை

ஆணையாளர் நாயகத்தினால் அல்லது அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றின் மூலம் நடத்தப்படுவதுடன் அப்பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் 40% அல்லது அதற்கு மேலான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். சகல பாடங்களிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் மொத்த புள்ளிகளின் தகைமைகளின் தொடர் இலக்க அடிப்படையில் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான எண்ணிக்கையைப் போன்று இருமடங்கு விண்ணப்பதாரிகள் கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சையானது அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் நடாத்தப்படுவதுடன் அதில் அதிகூடிய 25 புள்ளிகள் வரை பெற்றுக்கொள்ள முடியும். எழுத்துமூலப் பரீட்சை மற்றும் கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மொத்தப் புள்ளிகளின் தகைமைகளின் தொடர் இலக்கத்தின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். சம்பந்தப்பட்ட பெறுபேற்று அட்டவணையை அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்கள பணிப்பாளருக்கு பெற்றுக் கொடுத்தபின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பெறுபேறுகள் பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகள் சகலருக்கும் தனிப்பட்ட முறையில் அல்லது www.results.exams.gov.lk இணையத் தளத்தின் ஊடாக தெரிவிக்கப்படும். பரீட்சையை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளரின் தீர்மானமே கடைசித் தீர்மானமாகும்.

06. இப்பரீட்சை பின்வரும் நகரங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் தங்கள் வசிப்பிடத்துக்கு மிக அண்மையில் உள்ள நகரத்தை பரீட்சை நிலையமாக தேர்ந்தெடுக்க வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் நகரமும் நகர இலக்கமும் பின்வரும் அட்டவணைக்கு ஏற்ப விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடவேண்டும். விண்ணப்பிக்கப்பட்ட நகரத்தை மாற்றுவதற்கு பின்னர் சந்தர்ப்பமளிக்கப்படாது.

| நகரம் | நகர இலக்கம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|---|
| கொழும்பு | 01 | வவுனியா | 13 |
| கம்பஹா | 02 | திருகோணமலை | 14 |
| களுத்துறை | 03 | மட்டக்களப்பு | 15 |
| மாத்தளை | 04 | அம்பாறை | 16 |
| கண்டி | 05 | புத்தளம் | 17 |
| நுவரெலியா | 06 | குருநாகல் | 18 |
| காலி | 07 | அநுராதபுரம் | 19 |
| மாத்தறை | 08 | பொலநறுவை | 20 |
| அம்பாந்தோட்டை | 09 | பதுளை | 21 |
| யாழ்ப்பாணம் | 10 | மொணராகலை | 22 |
| மன்னார் | 11 | கேகாலை | 23 |
| முல்லைத்தீவு | 12 | இரத்தினபுரி | 24 |
| | | கிளிநொச்சி | 25 |

ஒரு நகரத்தில் பரீட்சை நிலையமொன்றை தாபிப்பதற்கு தேவையானளவு விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து, அந்த விண்ணப்பதாரிகள் அண்மையில் வேறு நகரத்தில் தாபிக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். உத்தேச எல்லா நகரங்களிலும் அல்லது அதிகமான நகரங்களில் பரீட்சை நிலையங்களை தாபிப்பதற்குத் தேவையான எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை முன்வைக்காதவிடத்து பரீட்சையை கொழும்பில் மட்டும் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

07. **எழுத்துமூலப் பரீட்சை :**

இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழிமூலத்தை மாற்றுவதற்கு பின்னர் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது. பரீசார்த்தி பரீட்சைக்கு தோற்றும் வினாப்பத்திரங்கள் யாவற்றுக்கும் விண்ணப்பித்த மொழிமூலம் பதிலளிக்க வேண்டும்.

***இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டது.***

01. ***நுண்ணறிவுத் தேர்வு***- மொத்தம் 100 புள்ளிகள் – நேரம் -01 மணித்தியாலம்

பரீட்சார்த்தியின் தர்க்கவியல், பொது அறிவு, தீர்மானிக்கும் இயலுமை போன்ற விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காகத் தயாரிக்கப்படும். இவ்வினாப்பத்திரம் பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்கமான விடையளிக்கும் 50 மாதிரி வினாக்களைக் கொண்டதாகும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

02. ***பொது அறிவு***- மொத்தம் 100 புள்ளிகள்-நேரம் 01 மணித்தியாலம்.

இலங்கை அரசியல், சமூகவியல், கலாசாரம் மற்றும் பொருளாதார சூழல், தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த தற்கால விடயங்கள், தேசிய மற்றும் சர்வதேச விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி தொடர்பிலான புரிந்துணர்வினை பரிசீலிப்பதற்கான இவ்வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்கமாக விடையளிக்கும் 50 மாதிரி வினாக்களைக் கொண்டதாகும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சை (அதிகூடிய புள்ளிகள் 25)

கணினி அறிவு, ஆங்கிலமொழித் தேர்ச்சி, நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்படும் தகைமைகள் ஆகியவற்றுக்காக அதிகூடிய 25 புள்ளிகள் வழங்கப்படும்.

08. **விண்ணப்பப்படிவமும் விண்ணப்பிக்கும் முறையும் :**

விண்ணப்பப்படிவத்தில் தலைப்புகள் 01 தொடக்கம் 09 வரை முதலாம் பக்கத்திலும், 10 தொடக்கம் 16 வரை இரண்டாம் பக்கத்திலும் எஞ்சிய பகுதியை மூன்றாம் பக்கத்திலும் அமையுமாறு விபரங்கள் தனது சொந்தக் கையெழுத்தில் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும் சரியான முறையில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்களும் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். ஆகவே விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைப்பதற்கு முன் அது விண்ணப்பப்படிவத்தின் மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளதா, சகல விபரங்களும் குறிப்பிடப்பட்டு சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா, பரீட்சை கட்டணம் செலுத்தப்பட்டு அது பற்றிய விபரங்கள் விண்ணப்பப்படிவத்தில் சேர்க்கப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்ற விடயங்கள் பற்றி கவனம் செலுத்தவும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தன்னிடம் வைத்திருப்பது விண்ணப்பதாரிக்கு பயனுடையதாகும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்துடன் ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழுடன்ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் கிடைத்ததாக விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படமாட்டாது.

09. அரசசேவை/ மாகாண அரச சேவை/ அரச கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பப்படிவங்கள் அவர்களின் நிறுவனத்தலைவரின் ஊடாகஅனுப்பி வைக்கப்பட வேண்டும்.

10. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளுடையவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற முடிவின் கீழ், முறையாக பரீட்சைக் கட்டணம் செலுத்தி, குறிப்பிடப்பட்ட திகதி அல்லது அதற்குமுன் விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைத்திருக்கும் விண்ணப்பதாரிகள் சகலருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதியட்டை விநியோகிக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதியட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டவுடன் அதுபற்றி இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தினால் பத்திரிகை விளம்பரமொன்று வெளியிடப்படும். விளம்பரம் வெளியிடப்பட்ட இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பின்னரும் அனுமதியட்டைகள் கிடைக்காத போது அதுபற்றி விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டவாராக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும். உங்களிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டதற்கான பற்றுச்சீட்டு, பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விலாசம் ஆகிவற்றை குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் வினவ வேண்டும். கொழும்புக்கு வெளியிடத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் அனுமதி அட்டையின் பிரதியொன்றை மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொள்வதற்காக மேற்குறிப்பிட்ட விபரங்களுடன் உங்கள் மின்னஞ்சல் இலக்கத்தையும் குறிப்பிட்டு, விபரங்கள் அடங்கிய கோரிக்கைக் கடிதமொன்றை மின்னஞ்சல் ஊடாக இலங்கைப் பரீட்சை திணைக்களத்திற்கு அனுப்பி வைத்து அதுபற்றி வினவுதல் பயனுறுதி மிக்கது.

10.1 விண்ணப்பப்படிவத்திலும் அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஏதேனும் நிறுவனத்தைச் சேர்ந்த பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஒரு விண்ணப்பதாரி அவரது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்த வேண்டும் என்பதுடன் அவ்வாறில்லாத விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை அதிபர் /ஓய்வுபெற்ற அதிபர், பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமான ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையைச் சேர்ந்த அதிகாரி, ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேலான வருடாந்த இணைந்த சம்பள அளவுத்திட்டத்தைப் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவை அல்லது நிரந்தர பதவியணி அதிகாரி, பௌத்த விகாரைத் தலைவர் அல்லது நாயக்கதேரோ அல்லது வேறு மதங்களைச் சேர்ந்த மத நிலையமொன்றின் ஏற்றுக்கொள்ளக்கூடிய தரத்தைச் சேர்ந்த ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். இந்தத் தொகையைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 என்ற வருமானத் தலைப்பின் கீழ் அரசாங்கத்தின் வருமானத்தில் வரவு வைக்கப்படும் வகையில் நாட்டிலுள்ள எந்தவொரு தபால் அல்லது உபதபால் நிலையத்துக்கு பணம் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்ட வேண்டும். பரீட்சைக் கட்டணத்துக்கு மேலதிகமாக எவ்விதமான கட்டணமும் அறவிடப்படாதென தயவுடன் அறிவித்துக் கொள்கின்றேன். பரீட்சைக் கட்டணம் தொடர்பில் காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படாது. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எந்தவொரு காரணத்துக்காகவும் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சையொன்றுக்காக மாற்றப்படவோ முடியாது என்பதுடன் பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தன்னிடம் வைத்திருப்பது பயன்படும்.

11. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின் போது விண்ணப்பதாரரின் அடையாளத்தை பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்கு உறுதிப்படுத்துவதற்காக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது அங்கீகரிக்கப்பட்ட கடவுச்சீட்டு மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். ஒரு விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதி அட்டை விநியோகிக்கப்படுவதன் மூலம் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது பதவிக்கான தகுதி பெற்றவராகக் கருதப்படாது. பரீட்சார்த்திகள் பரீட்சையை நடாத்தல் மற்றும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு இணங்கி ஒழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறுவதால் அவருக்கு பரீட்சைஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும். தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட பரீட்சைக்கான அனுமதி அட்டையை பரீட்சைக்கு தோற்றும் முதல் நாளிலேயே பரீட்சை மண்டப தலைவருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

12. இந்த அறிவித்தல் மூலம் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ளும் பொறுப்பு அளவுக் கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் பணிப்பாளரைச் சாறும் என்பதுடன் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல அறிவித்தல்களில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமாயின் அப்போது சிங்கள மொழிமூல அறிவித்தல் மேலோங்கி நிற்கும்.

எஸ். என். அகுரண்திலக்க,
அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் பணிப்பாளர்.

அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம்,
மாஹேனவத்த,
பிட்டிபன,
ஹோமாகம,
2017, செத்தெம்பர் 29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலகத் தேவைக்காக

**அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர் சேவைப் பிரிவைச் சேர்ந்த அளவியல் ஆய்வு உத்தியோகத்தர் (திணைக்களம் சார்) பதவிக்கு ஆட்சேர்ப்புசெய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2017**

OPEN COMPETITIVE EXAMINATION FOR THE RECRUITMENT TO THE POSTS OF METROLOGY EXPERIMENTAL OFFICERS (DEPARTMENTAL) OF DEPARTMENT OF MEASUREMENT UNITS, STANDARDS AND SERVICES -2017

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

பரீட்சைக்கு தோற்றவுள்ள நகரம் மற்றும் நகர எண்

நகரம் : நகர எண் :

(அறிவித்தலின் 06 ஆம் பிரிவின் பிரகாரம்)

1. பெயரை எழுதிய பின் முதல் எழுத்துகளை ஆங்கில பெரிய எழுத்தில் எழுதுக.
உதாரணம் - NIMAL,.B.C.D : ..........................................................................................................

2. முதல் எழுத்துக்களால் சொல்லப்படும் பெயர்களை ஆங்கில பெரிய எழுத்தில் எழுதுக : ..........................................................
..........................................................................................................................................................

3. முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :-
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

4. நிரந்தர முகவரி ஆங்கில பெரிய எழுத்தில் (அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்)
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

5. பால் : (ஆண்-0, பெண்-1) சம்பந்தப்பட்ட இலக்கத்தை கூட்டினுள் எழுதுக. ☐

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

7. சிவில் அந்தஸ்து :
(திருமணமான -1, திருமணமாகாத -2) ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்).

8. இனம் (சிங்களவர்-1, தமிழர்-2, இந்தியத்தமிழர்-3, முஸ்லிம்-4,வேறு-5): ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

9. (அ) பிறந்த திகதி :
ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி : ☐☐

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்ஆகும் போது வயது (2017 நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி ஆகும் போது)
வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

10. நீங்கள் இலங்கைப் பிரசை ஆனது பதிவிலா அல்லது பரம்பரையாகவா என்பதை குறிப்பிடவும். (பதிவின் மூலம் ஆயின் விபரங்களைக் குறிப்பிடவும்) ..........................................................................................................
..........................................................................................................................................................

11. கல்வி/தொழில் தகைமைகள் :
11.1 பட்டம் : ..........................................................................
பல்கலைக்கழகம் : ..................................................................
வெளிவாரி /உள்வாரி : ............................................................

பட்டத்திற்கான அங்கீகாரத் திகதி : ............................................
பாடங்கள் : ..............................................................................
தர சித்திகள் : ..........................................................................
பரீட்சைக்கு தோற்றிய மொழி மூலம்: .......................................

11.2

| | |
|---|---|
| நீங்கள் சித்தியடைந்திருக்கும் உயர் பரீட்சை | |
| சிங்களம் | |
| தமிழ் | |
| ஆங்கிலம் | |

11.3 வேறு கல்வி /தொழிற் தகைமைகள் :

| பரீட்சை/பாடநெறி | திகதி/கால எல்லை | நிறுவனம் |
|---|---|---|
| | | |

12. தற்போதைய தொழில் மற்றும் இதற்கு முன் ஏதேனும் பதவியில் இருந்தமை:

| நிறுவனம் | பதவி | இருந்து | வரை |
|---|---|---|---|
| | | | |

13. நீங்கள் ஏதேனும் அரச பதவியில் இருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளீர்களா? ........................................................................
(அவ்வாறெனின் விபரங்களைக் குறிப்பிடுக) : ........................................................................................................................

14. உங்களுக்கு எதிராக (தற்போது அரச சேவையில் இருப்பின்) திணைக்கள ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா?
...................................................................................................................................................

15. நீங்கள் ஏதேனும் குற்றத்துக்கு நீதிமன்றில் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீர்களா?:
...................................................................................................................................................

16. (i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட தபால்/உப தபால் அலுவலகம்: ..........................................................
(ii) பற்றுச்சீட்டு இலக்கம் : ..................................................................................................
(iii) திகதி : ..................................................................................................
(iv) செலுத்தப்பட்ட பணம் : ......................................................................

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டைக் கழறாதவாறு இங்கு ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றைத் தன்னிடம் வைத்திருத்தல் பயன்தரும்.) |

17. விண்ணப்பதாரியின் உறுதியுரை:
இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் ஏற்றவாறு உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ............... இலக்க மற்றும் ….............ஆந் திகதியுடைய பணப் பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன். பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைய செயற்படுவதற்கும் இப்பரீட்சையின் நிபந்தனைகளுக்கு அமைய நான் தகுதியற்றவராகக் காணப்பட்டால் பரீட்சைக்கு முன் அல்லது அது நடைபெறும்போது அல்லது அதற்குப் பின் எனது பரீட்சைக்கான உரிமையை இரத்துச் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் ஏதேனும் தீர்மானத்துக்கு நான் இணக்கம் தெரிவிக்கின்றேன். பரீட்சையை நடத்தல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பணிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் பற்றிய தீர்மானங்களுக்கும் இணங்குவதாக தெரிவிக்கின்றேன்.

………………..  ……………………..
திகதி  விண்ணப்பதாரியின் கையொப்பம்.

18. விண்ணப்பதாரி அரச ஊழியராயின் திணைக்களத் தலைவரின் அறிக்கை:-

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானவை எனவும்/ பின்வருமாறு திருத்தப்பட வேண்டுமெனவும், குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு, அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும், அவரின் வேலையும் நடத்தையும் ……………
………………………………………….. நான் உறுதிப்படுத்துகின்றேன். தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது (தொடர்பற்ற சொல்லை நீக்கவும்).

………………………..
திணைக்கள /நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பதவி : ........................................
(உத்தியோகபூர்வ முத்திரையால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்).

திகதி : ………………………..

9-890

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.